

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை - 2014

## "கடந்த நூற்றாண்டில் இலங்கையில் இந்துமதம், பௌத்த மதங்களில் ஏற்பட்ட கருத்தியல் வளர்ச்சி"

## 'Conceptual Development in Hinduism and Buddhism in Sri Lanka in the last Century'

பேருரை வழங்குனர் : பேராசிரியர் நா. ஞானகுமாரன்
மெய்யியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இடம் : கைலாசபதி கலையரங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திகதி : 12.01.2014

நேரம் : பிற்பகல் 1.30 மணி

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## சேர். பொன். இராமநாதன்
## நினைவுப் பேருரை - 2014

### "கடந்த நூற்றாண்டில் இலங்கையில் இந்துமதம், பௌத்த மதங்களில் ஏற்பட்ட கருத்தியல் வளர்ச்சி"

### 'Conceptual Development in Hinduism and Buddhism in Sri Lanka in the last Century'

| | | |
|---|---|---|
| பேருரை வழங்குனர் | : | பேராசிரியர் நா. ஞானகுமாரன்<br>மெய்யியல் துறை<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| இடம் | : | கைலாசபதி கலையரங்கம்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| திகதி | : | 12.01.2014 |
| நேரம் | : | பிற்பகல் 1.30 மணி |

## Massage from the Vice-Chaneellor

Jaffna University has the honor to give its give tribute to Sir Pon Ramanathan whose property has paves the way for us to establish University of Jaffna. As a mark of honor and to give its respect, the University has been traditionally conducting this Memorial Lecture following the Convocation.

We are very thankful to Prof. N.Gnanakumaran, Professor of Philosophy readily accepting our request and delivering this Memorial Lecture on 'Conceptual Development in Hinduism and Buddhism in Sri Lanka in the Last Century'.

This lecture has been Prepared after collecting information from different sources in Sri Lanka. Therefore this would attract all the audience and give insight on the present changes in Hinduism and Buddhism.

On behelf of the University, I thank Prof N. Gnanakumaran for delivering this lecture.

Prof. (Ms.) V. Arasaratnam
Vice-Chancellor
University of Jaffna.

மதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்களே, கலைப்பீடாதிபதி அவர்களே, பேராசிரியர்களே, துறைத் தலைவர்களே, சான்றோர் களே, மாணவர்களே, அவையில் வீற்றிருக்கும் அன்பர்களே அனைவர்க்கும் அன்புசால் வணக்கம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இருபத்தொன்பதாவது பட்டமளிப்பின் பின்னர் நிகழும் மதிப்பிற்குரிய சேர் பொன்னம்பலம் இராமநாதனின் ஞாபகார்த்தப் பேருரையை ஆற்றுவதற்கு வாய்ப்பளித்த துணைவேந்தர். பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பல்கலைக்கழகத்தில் ஆண்டு தோறும் அவரது குருபூசை தினத்தைக் கொண்டாடுவதோடு பட்டமளிப்பிற்குப் பிற்படத் தொடரும் இராமநாதன் நினைவுப்பேருரை, சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதென்பது அவர்கள் பல்கலைக்கழகத்திற்கும் இச் சமூகத்திற்கும் ஆற்றிய அளப்பரிய பணியினை நினைவு கூர்தலோடு அளிக்கும் நன்றியறிதலாகும். நீண்டதூர நோக்கோடு இராமநாதன் மகளிர் கல்லூரியையும் பரமேஸ்வர கல்லூரியையும் நிறுவி அன்றைய சமூக மாந்தர்களின் ஒழுக்க விழுமியஞ் சார்ந்த கல்வியறிவுக்கு வழிகாட்டி பெருந்தகையாவார். அதன் பெறுபேறாக இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிலைபேற்றுக்கும் வித்திட்ட சிந்தனையாளராக இராமநாதனைக் காணுகின்றோம். அந்த வகையில் இன்று பேசவுள்ள விடயத் தலைப்பாக “கடந்த நூற்றாண்டில் இலங்கையில் இந்துமதம், பௌத்த மதங்களில் ஏற்பட்ட கருத்தியல் வளர்ச்சி” யானது இராமநாதனைப் பற்றியும் சிந்திக்க வைப்பதாக அமைகின்றது.

இராமநாதன் பலதிறப்பட்ட அறிவியல் துறையில் புலமையும் புகழும் பெற்றவர். மேலும் சட்டநுட்ப அறிவும் அரசியல் ஞானமும்

கொண்டிருந்த போதிலும் ஆன்மிக நாட்டமும் சைவ தமிழ்ப் பண்பாட்டு ஈடுபாடும் கொண்டு செயல்பட்டவராக விளங்கினார். சைவமும் ஒழுக்கமும் சார்ந்த கல்வியை வளர்ப்பதிலும் இது தொடர்பான நிறுவனக் கட்டமைப்புக்களை உருவாக்குவதிலும் அயராது உழைத்தவராக விளங்கினார். சைவபரிபாலன சபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம் போன்றனவற்றின் உருவாக்கத்தில் பங்கு கொண்டவராக விளங்கியவர். பல மொழிப் புலமை கொண்ட இவர் சைவத்தின் பெருமையினை கடல் கடந்த நாடுகள் பலவற்றிலும் தெளிவுறத் தமது பேச்சாற்றலினால் சிறப்பித்தவராகக் காண்கின்றோம். ஒரு தடவை (1930ல்) இராமநாதன் இங்கிலாந்தில் இருந்தவேளை 'நாம் இங்கு ஏன் இருக்கின்றோம்?' எனும் வினாவை ஆங்கிலப் பத்திரிகை ஒன்று எழுப்பியிருந்தது. பல சிந்தனையாளர்கள், மெய்யியலாளர்கள் பதில் எழுதினர். இராமநாதனும் விடையெழுதினார். அதில் "கேளுங்கள் கிடைக்கும்; தேடுங்கள் கிடைக்கும்; தட்டுங்கள் திறக்கப்படும்; இறை அரசின் மர்மங்கள் அல்லது மாறும் உலகில் அழியாப் பெருவாழ்வு என்ற வாசகத்தில் உண்மை கிடைக்கும் என்றும் நாம் இருப்பது எதன் பொருட்டு? என்ற வினாவிற்கு அங்கேதான் விடைஉள்ளது" என்றும் குறிப்பிட்டார். இது அவரது திறமையின் நுட்பத்தை வெளிப்படுத்தியதாகக் கருதப்பட்டது. மேலும் சைவ சித்தாந்த மகாசமாஜம் 1965ல் ஆரம்பித்த போது முதலாவது மகாநாட்டிற்கு ஸ்ரீலஸ்ரீ திருப்பாதிப்புலியூர் மடாதிபதிகள் இராமநாதனை தலைமை தாங்க அழைத்தமை அவரது சிறப்பிற்குச் சான்றாகும். இந்துசமய வளர்ச்சியில் இராமநாதன் போலப் பலரின் பங்களிப்பினால் இலங்கை எவ்வகையான வளர்ச்சியினையும் சிறப்பினையும் பெற்றதென்பதனை இவ்வுரையானது எடுத்தாள முற்படுவதாகும்.

குறுகிய காலத்தினுள் இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்ட போதிலும் குறிப்பிடத்தக்க வகையில் எக்கருத்தியலோ அல்லது எவர் கருத்துக்களோ இடம் பெறவில்லை என நியாயமாகக் கருதினால் அதனை விரிந்த பிறிதொரு ஆய்வொன்றில் பிற்பட இணைப்பதற்குச் சாத்தியமுள்ளதெனலாம். எனினும் இவ்வாய்வினை மேற்கொள்ள அழைத்த மதிப்பிற்குரிய துணைவேந்தருக்கும் இப் பணிக்கு வேண்டிய நூல்கள், சஞ்சிகைகள் சிலவற்றை தந்துதவிய அன்பிற்குரிய கலாநிதி சனாதனன், பேராசிரியர். செ.கிருஷ்ணராசா, பேராசிரியர். எஸ்.சுசீந்திரராசா, திரு.ஆ.சபாரத்தினம், கொழும்பு இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள், விமல் சுவாமிநாதன், பல்கலைக்கழக நண்பர்கள், மற்றும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

“கடந்த நூற்றாண்டில் இலங்கையில் இந்துமதம் பௌத்த மதங்களில் ஏற்பட்ட கருத்தியல் வளர்ச்சி”

# 'Conceptual Development in Hinduism and Buddhism in Sri Lanka in the last Century'

அறிமுகம்:

இலங்கையானது சிறியதொரு தீவானதுடன் பல் சமயங்கள் நிலவும் ஒரு நாடாகும். குறிப்பாக பௌத்தம், இந்துசமயம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற முக்கியமான சமயங்கள் இங்கு விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கனவாகும். இந்து சமயமும் பௌத்தமும் பழமைக்குரியதான வரலாற்றினைக் கொண்டிலங்குவது காணலாம். இவ் விரு சமயங்களும் இந் நாட்டிற்கு அயல்நாடான இந்தியாவிலிருந்து புராதன காலத்திலேயே வந்தவையாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாக அந்நியரின் படையெடுப்பின் காரணமாக கிறிஸ்தவமும் இஸ்லாமும் இந் நாட்டிற்கு அறிமுகமாகிய சமயங்களாயின. எவ்வாறாயிருந்த போதிலும் பெரும்பாலான இலங்கையர்கள் பௌத்தர்களாகவும் இனவடிப் படையில் சிங்களவர்களாகவும் விளங்குகினறனர். அவர்கள் இலங்கையின் சனத்தொகையில் தற்போது ஏறத்தாள எழுபத்தைந்து (74.9%) வீதமானவர்களாக விளங்குகின்றனர். பெரும்பாலான தமிழர்கள் (24.6%) பல சமயங்களைக் கைக்கொள்பவர்களாக விளங்குகின்றனர். அவர்களில் பெரும்பான்மையோர் இந்துக்களா கவும் ஏனையோர் இஸ்லாமியர்களாகவும் கிறிஸ்தவர்களாகவும் விளங்குகின்றனர்[1]. இலங்கையின் மொத்தச் சனத்தொகையானது கடந்த வருடக் கணக்கெடுப்பின் பிரகாரம் (20,263,723) 2 .3 கோடி

[1] Dept. of Censes & statistics, Basic Population information, Colombo.2012 p. 59

மக்களில் பௌத்தர்கள் 70.1% வீதத்தினராகவும் இந்துக்கள் 12.6% வீதத்தினராகவும் இஸ்லாமியர்கள் 9.7% வீதத்தினராகவும் கிறிஸ்தவர்கள் 7.4% வீதத்தினராகவும் விளங்குவது காணலாம்[2]. 2012ல் எடுத்த புள்ளிவிபரமானது மக்களது விகிதாசாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏறத்தாழ முப்பது வருடங்களுள் ஏற்படுத்தியுள்ளமை புலனாகின்றது. பெரும்பான்மையினத்தினரான சிங்களவர் .9% மும் இஸ்லாமியர்கள் 1.2% மக்கள்தொகை அதிகரிப்பினையும் தமிழர்கள் 1.5% மும் இந்தியத் தமிழர் 1.2% மக்கள் தொகை குறைவினையும் கொண்டவர்களாக அமைகின்றன.[3] இதே போக்கு சமயநிலைப் பரம்பலிலும் நிலவுவதனை அவதானிக் கலாம். எனினும் இங்கு குறிப்பாக இந்து சமயத்தினதும் பௌத்த சமயத்தினதும் கருத்தியல் வளர்ச்சியினை மட்டுமே கருத்தில் கொள்வதாக அமைவது குறிப்பிடத்தக்கது. கருத்தியலானது சித்தாந்தமாகக் கொள்ளப்படுகின்ற போதிலும்[4] இங்கு கருத்தியலா னது எண்ணக்கருத்தம்சங்களை நோக்குவதாகவே அமைகின்றது. மேலும் இவ்வாய்வானது 1900ல் முதல் 2000 ஆண்டிற்குரிய பகுதியினை உள்ளடக்குவதாகிறது. குறிப்பிட்ட ஆய்வுப் பகிர்வானது குறிப்பிட்ட கால எல்லைக்குட்பட்டமையினால் இங்கு இந்துக்கள் பற்றிய ஆய்வானது யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மைய அழுத்தம் கொடுத்து அமைகின்றது. யாழ்ப்பாணத்திற்கு அப்பாற்பட்ட எல்லையானது மட்டுப்பாடுக்கு உட்பட்டதுடன் பௌத்தம் பற்றிய கருத்தியலும் பொதுமை நோக்கில் எடுத்தாளப்படுகின்றது.

---

[2] Ibid. p. 67

[3] Ibid. p. 68

[4] தற்கால க்ரியா தமிழ்அகராதி. க்ரியா, சென்னை. 2008. ப.359

**இலங்கையில் இந்துசமயம்:**

இங்கு இந்து சமயம் எனும் போது குறிப்பாகச் சைவ சித்தாந்தத்தினையும் இந்து சமயத்தில் குறிப்பிடத்தக்க செல்வாக் கினைப் பெற்ற வேதாந்தத்தினையும் நோக்குவதாக அமைகின்றது. இக்கட்டுரையானது இலங்கையில் நிலவிய இந்துசமயத்தினை மேலெழுந்தவாரியாகச் சுட்டுவதுடன் சமகால நோக்கில் இந்து சமயத்தின் இருப்பினையும் அதன் வளர்ச்சியினையும் ஆராய முயல்கின்றது. தொன்மையான காலத்திலேயே இந்துசமயமானது இலங்கையில் நிலவியமைக்குப் போதிய சான்றினைக் காணக் கூடியதாகவுள்ளது. பழம் பெரும் இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தில் தீவிர சிவபக்தனாகிய இராவணன் சிவனை ஆழ்ந்த பக்தியுடன் வழிபட்டவனாகவும் இலங்கையைப் பலவாண்டு களாக ஆட்சி செய்தவனாகவும் எடுத்தாளப்படுகின்றான். சிவனை மெய்யன்போடு வழிபட்டு இராவணன் சிவனிடமிருந்து பல வரங்களைப் பெற்றவனாகக் காட்டப்படுதல் குறிப்பிடத்தக்கது இராவணன் இலங்கையை ஆண்டவகையில் “இலங்கேஸ்வரன்” என அழைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஆறாம் நூற்றாண்டு களின் பின்னர் சைவ சமய வளர்ச்சியானது நாயன்மார்களினால் தமிழ் நாட்டில் பெரிதும் வழிப்படுத்தப்பட்டது எனலாம். நாயன்மார் களினால் பாடப்பட்ட திருப்பாடல்கள் சைவ சமய வளர்ச்சிக்கு வழிகாட்டின. அருளாளர்களின் எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட திரு முறைப்பாடல்கள் சமய எழுச்சிக்கு உதவின. சமய குரவர்களில் முதன்மையானவரான திருஞானசம்பந்தர் இலங்கையில் உள்ள இரு சிவ தலங்களையிட்டுப் பாடல் பாடியுள்ளமை காணலாம். திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரப் பதியையும் மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரப் பதியையும் குறித்துப் பத்துத் திருப்பதிகங்கள் பாடியுள்ளமை காணலாம். சிவனாலயங்களான திருக்கோணாமலையில் விளங்கும் திருக்கோணஸ்வரரையும், மன்னாரில் விளங்கும் திருக்கேதீஸ்வரநாதரையும் பற்றித்

திருப்பதிகங்கள் பாடியுள்ள பக்திப் பனுவல்கள் திருக்கோனேஸ்வரப் பதிகமும்[5] திருக்கேதீஸ்வரப் பதிகமும்[6] முதல் மூன்று தேவாரத் திருப்பதிகங்களுள் உள்ளடங்குதல் காணலாம். மேலும் அருணகிரிநாதரும் திருக்கோணமலைத் திருத்தலம் பற்றிப் பாடல் பாடியுள்ளமை அறியலாம். இராவணன் வழிபட்ட தலம் என்ற வகையில் இத்தலத்தின் தொன்மையானது கி.மு. 6000 ஆண்டு களுக்கு முற்பட்டதாக எண்ணப்படத்தக்கதாகும்[7]. திருக்கேதீஸ்வரத் தலம் பற்றி திருஞானசம்பந்தர் பாடியது போல சுந்தரமூர்த்தி நாயனாரும் தேவாரத் திருப்பதிகம் பாடியுள்ளமை காணலாம். திருமூலநாயனாரும் ஈழத்தைச் சிவபூமி என அழைத்தமை அறியத்தக்கதாகும். மேலும் தமிழகத்தில் இருந்த பல சைவ அருளாளர்கள் ஈழத்தில் விளங்கிய பல ஆலயங்கள் பற்றிப் பாடல்கள் பாடியுள்ளமையும் பாடல்களில் இதன் பெருமை பற்றிச் சுட்டியுள்ளமையும் காணலாம். அருணகிரிநாதர், குமரகுருபரர் ஆகியோர் கதிர்காமக் கந்தன் பற்றிப் பாடியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்துசமயமானது தொன்மையான காலத்திலேயே வளர்ச்சி கண்டிருந்த போதிலும் சைவமானது சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டதுடன் குறிப்பாக இந்தியாவின் தென்னாட்டிலும் இலங்கையிலும் முதன்மைக்குரிய சமயமாக விளங்கிற்று. மறுவார்த்தையில் கூறின் சைவசித்தாந்தப் பிரிவானது இலங்கையில் தமிழர் பெரிதும் வாழ்ந்த வடக்கு, கிழக்கு போன்ற பகுதிகளில் பெரிதும் செழித்து வளர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தென்னிந்தி யாவில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் சைவமானது சிறப்பாக நிலவிய

---

[5] 3ம் திருமுறை பதிக எண்123. பாடல் 4121 - 4130

[6] 2ம் திருமுறை பதிக எண் 107, பாடல் 2627 - 2637

[7] வடிவேல், (1982) திருக்கோணாமலை மாவட்டத் திருப்பதிகங்கள், இந்துசமயத் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு, ப. 68

நிலையில் புவியியல் ரீதியாகத் தமிழ் நாட்டிற்கு அயலாக அமைந்த இலங்கையிலும் அதன் தாக்கம் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்தமை தெளிவிற்குரியதாகும். இலங்கையின் மத்திய பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களில் தொழில் செய்வதற்காகப் பிரித்தானியராட்சிக் காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த தமிழர்களும் சைவசமயத்தைப் பின்பற்றியவர்களாக விளங்குகின்றனர். பிரித்தானியரது ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ மிஷினரிமார் தமது சமயத்தினை நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பரப்ப முற்பட்டனர். அவர்கள் பௌத்தர்களையும் இந்துக்களையும் தமது சமயங்களிற்கு மாற்றுவதற்கு ஆட்சி செய்தவர்களின் உதவியுடன் செயற்பட்டனர். ஆங்கிலக் கல்வி, தொழில் வாய்ப்பு, மற்றும் இதர சில சலுகைகளை முன்னிறுத்தி மக்களைச் சமய மாற்றங்களுக்கு வழிகாட்டினர். அன்றைய பொழுது வாழ்ந்த சில கல்வியாளர்களும், சமய அபிமானிகளும் இதற்கு எதிராக ஆக்க பூவமான செயற்திட்டங்களைச் செயற்படுத்த முற்பட்டனர். தமது இந்து சமயம் பற்றியும் அதன் தத்துவச் சிறப்புக்களையும் பிரசாரம் செய்ய முற்பட்டதுடன் சமயக் கல்வியினைப் பெறுவதற்கான வாய்ப்புக்களையும் வழங்க முற்பட்டனர். நல்லூரைச் சார்ந்த நாவலர் (1822 - 1879) குப்பிளானைச் சார்ந்த காசிவாசி செந்தில்நாதையர் (1848 - 1924), புலோலி மேற்கைச் சேர்ந்த நா.கதிரைவேற்பிள்ளை (1871 - 1907), கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதர் போன்றோர் நொய்ந்த நிலையில் இருந்த சமயத்தைப் புத்தாக்கம் செய்யவேண்டிச் செயற்பட்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர் களாக விளங்கியதுடன் சமயத்தின் சிறப்புக்களைப் பிரசாரம் செய்ததுடன் பல நூல்களினூடாகச் சமயத்தின் பெருமைக்குரிய சிறப்புக்களையும் நுட்பங்களையும் வெளிப்படுத்தினர். நல்லை நகர் நாவலர் இவ்வாய்வின் காலப் பகுப்பிற்கு முற்பட்டவராக அமைந்த போதிலும் அவரது அத்திவாரத்திலேயே பல அறிஞர்களின் பணியானது கட்டியெழுப்பட்டதாக அமைந்தமை இங்கு குறிப்பிடத்

தக்கதாகும். அவ்வகையில் அவரது செல்வாக்கும் சுட்டத்தக்க தாகும். இச் சமயப் பெரியார்கள் தென்னிந்தியாவில் சிலகாலம் வாழ்ந்தவர்களாக விளங்கியதுடன் அங்குள்ளவர்களினால் போற்றப் பட்டவகையில் சமய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களித்தவர்களாக விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தச் சூழ்நிலையில் சமய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பங்களித்த சேர் பொன்னம்பலம் இராமநாதனின் (1851 - 1930) பங்களிப்பினை அவரது இந் நினைவுப் பேருரையில் எடுத்தாள்வது சிறப்புக்குரியதாகும்.

இந்து சமயத்தின் கருத்தியல் வளர்ச்சியினை நோக்குவதற்கு முன்னராக இச்சமயத்தின் கட்டமைப்பானது எவ்வகையில் நிலவிற்றென்பதனை நோக்குவது பயனுடைத்தாகும். இச் சமயக் கட்டமைப்பினையும் அது அமைந்த சூழ்நிலை அமைவினையும் எடுத்தாள்வது அன்றைய தேவையினையும் போக்கினையும் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பானதாகும்.

இலங்கையில் சைவத்தலங்களில் சிவனுக்குரிய திருத்தலங் களாக, பஞ்ச ஈஸ்வரங்களாக திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ் வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டேஸ்வரம் ஆகிய ஐந்தும் சிறப்புடைத் தலங்களாகக் கொள்ளப்படுதல் காணலாம். இவ்வைந்து ஆலயங்களும் இலங்கையின் வடக்கு, கிழக்கு, மேற்கு, தென்கிழக்கு, வடமேற்கு எனப் பல்திசையில் பரவி அமைந்திருப்பது நோக்கத்தக்கதாகும். இது ஈழத்திரு நாடானது பரவலாக எல்லாப் பகுதிகளிலும் இந்து சமயத்தைச் சார்ந்தவர் களைக் கொண்டமைந்திருந்தது என்பதனைப் புலப்படுத்தத்தக்கதாக அமைந்துள்ளது. சிவனைவிட ஈழத்திருநாட்டில் அம்மன், விநாயகர், முருகன், விஷ்ணு, நாகதம்பிரான், வைரவர் போன்ற பல தெய்வங்களை முதன்மைப்படுத்திய ஆலயங்கள் பலவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 'கோவில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்' எனும் முதுமொழிக்கமைய சமயப் பற்று

மிக்கவர்களாக தம் வாழ்விடங்களோடு கோவில்களை அமைத்து தம்வாழ்வைப் பேணியவர்களாக அக் கால மக்களைக் காணலாம். குறிப்பாகச் சிறு கிராமங்கள் முதலாக நகரங்கள் ஈறாக வாழ்ந்த அன்றைய மக்கள் ஆலயங்கள் இணைந்ததொரு வாழ்க்கை முறையினையே பேணி வந்தமையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கோவில்கள் இணைந்த வாழ்வியல் முறைமையானது பல்லவர்கால நாயன்மாரது வாழ்வியல் கோலத்துடன் கலந்துவந்த பாணியில் தொடந்தும் சைவர்களால் இன்றுவரை பேணப்பட்டு வருதல் நோக்கத்தக்கதாகும். குறிப்பாகத் தேவாரமுதலிகள் கோவில் கோவிலாகச் சென்று அவ்வாலயங்களின் பெருமைக ளையும் இறைவனின் சிறப்புக்களையும் எடுத்தியம்பும் வகையில் திருப்பதிகங்கள் பாடிப் பரவி இறைவனை வழிபட்டமையைக் காணலாம். இவ்வாறு எழுந்த பல ஆலயங்களும் அந்நியராட்சியின் போது இடித்து அழிக்கப்பட்டமை துரதிருஷ்டத்திற்குரியதொன்றாகும். எனினும் மக்களின் மனந்தளரா நம்பிக்கையும் விடாமுயற்சியும் இவ்வாறு அழிந்து போன பல ஆலயங்களும் புத்துயிர் பெறுவதற்கு வழிகோலியதுடன் சைவம் செழிக்கவும் உதவியதாயிற்று. இந் நிலை கடந்த கால அனர்த்தங்களிற்கும் பின்னரும் இலங்கையில் சிதைவுற்ற ஆலயங்கள் பல செம்மையுற்று மக்களது வழிபாட்டிற் குரியவையாக மாற்றம் பெற்றமையைக் காணலாம்.

இலங்கையில் சைவர்கள் இறுக்கமான வகையில் தென்னிந் தியாவில் விளங்கும் சைவர்கள் போலச் சைவசித்தாந்த நெறிக் குரியவர்களாக விளங்கினர். தொன்மைக்குரிய நெறியாக விளங்கும் சைவத்தில் இன்றும் நிலைத்திருக்கும் பிரிவுகளாக விளங்கும் காஷ்மீர சைவம், வீர சைவம் ஆகியன போன்று சைவ சித்தாந்தமும் ஒன்றாக அமைவது குறிப்பிடத்தக்கதாகும். இச் சைவ சித்தாந்த தரிசனமானது பதின்காம் நூற்றாண்டில் வாழ்ந்த மாதவாச்சாரியாரின் சர்வ தரிசனசங்கிரகத்தில் சைவ தரிசனம்

எனவும்[8] தத்துவ லிங்கதேவரின் தத்துவ நிஜானு போகசாரத்திலும்[9] தத்துவப் பிரகாசரின் தத்துவப் பிரகாசத்திலும்[10] ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரெனக் கருதப்படும் திருமூலர் திருமந்திரத்திலும்[11] சுத்த சைவம் எனவும் சைவ சித்தாந்த நெறியைச் சுட்டி நிற்றல் இங்கு நோக்கத்தக்கதாகும். சிவஞானசுவாமிகள் சுத்த சைவமானது கருத்தியல் ரீதியில் சைவசித்தாந்தத்திலிருந்து வேறுபட்டதல்ல எனக் குறிப்பிடுதல் அவதானிக்கத் தக்கதாகும். திருமூலர் 'சுத்த சைவம்' பற்றிக் குறிப்பிடுகையிலேயே 'மேலான தற்பரங் கண்டுள்ளோர் சைவசித்தாந்தரே' எனச் சுட்டி நிற்றல் குறிப்பிடத் தக்கதாகும்.[12] இதனின்று ஆரம்பத்தில் சுட்டப்பெற்ற சுத்த சைவம், சைவ தரிசனம் ஆகியனவே பின்னர் சைவசித்தாந்தமாக எடுத்தாளப்பட்டிருத்தல் வேண்டுமென்பது பொருத்தமானதாகும்.

## இன்றைய நோக்கில் சைவசித்தாந்த வளர்ச்சி:

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் மலையகத்திலும் தமிழர்கள் அதிகம் செறிந்து வாழ்கின்றனர். எனினும் ஏனைய பகுதிகளிலும் சைவர்கள் குறைந்த தொகையினராக விளங்கினும் கோவில்கள் பல அமைத்துச் சைவர்களாக வாழ்ந்து வருவதுடன் சைவம் சார்ந்த சமயச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருவது காணுதற்குரியதாகும். குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, நுவரெலியா, திருகோணாமலை ஆகிய மாவட்டங்களில் சைவசித்தாந்த நெறியானது முதன்மைக்குரிய தொன்றாக விளங்கியது. சிறிய தீவாக இலங்கை

---

[8] Margaret Stulty,(1985)Hinduism, The Aguraian press, London, p.110

[9] தத்துவலிங்க தேவர், தத்துவநிஜானு போகசாரம், ஆண்டு, பதிப்பு ஆகியன சுட்டப்படவில்லை, 6ம்பாடல், ப.92

[10] தத்துவப் பிரகாசரின் தத்துவப் பிரகாசம், கணபதிப்பிள்ளை (பதிப்பு) நந்தன வருடம், ப.171.

[11] திருமூலா திருமந்திரம், பாடல், 1399.

[12] மேற்குறிப்பிட்டது, பாடல் 1421

இலங்குகின்ற போதிலும் இங்கு எண்ணற்ற ஆலயங்கள் விளங்கும் வகையில் இது சிவபூமியாகக் கொள்ளத்தக்கதாகும். புராதன பெருமை கொண்ட சிவனுக்குரிய ஆலயங்கள் மாத்திரமன்றி அம்மன், விநாயகர், முருகன், விஷ்ணு போன்ற தெய்வங்களை மூல மூர்த்தங்களாகக் கொண்ட ஆலயங்கள் பலவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். முருகன் புகழ் பேசும் ஆலயங்களாக நல்லூர் கந்தசாமி, கதிர்காமக் கந்தன், மாவிட்டபுரம் முருகன், செல்வச்சந்நிதி முருகன் ஆகிய முருகன் ஆலயங்கள் சிறப்பிற்குரியனவாகும். இம் முருகன் ஆலயங்களுள் சில ஆகம மரபு சார்ந்தனவாகவும் சில ஆகம மரபு சாராதனவாகவும் சில ஆகம மரபு சார்ந்தும் சாராததாகவும் ஆன பண்பினைக் கொண்டதாக அமைந்துள்ளன. பிரபல்யம் கொண்ட ஆலயங்களாக மேலே சுட்டியவை அமைந்த போதிலும் விநாயகர், அம்மன் ஆகிய தெய்வங்களுக்கு எழுந்த ஆலயங்களே எண்ணிக்கையில் அதிகமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பொதுவில் விநாயகர், அம்மன் ஆகிய தெய்வங்களுக்கு கோவில் இல்லாத கிராமங்களே இல்லை எனலாம். வினை தீர்க்கும் தெய்வமாக விநாயகர் கருதப் பெறுவதால் போலும் விநாயகர் வழிபாடானது சைவர்களிடம் பெரிதும் இடம் பிடித்திருந்த தெனலாம். விநாயகரைப் போல அம்மனும் பல்வேறு நாம ரூபங்களில் பொரும்பாலான மக்களால் ஏற்றி போற்றப்படுதல் அறிதற்குரியதாகும்.

சைவ ஆலயங்களை விட வைஷ்ணவ மரபிற்குரித்தான விஷ்ணு ஆலயங்களும் இங்கு விளங்குதல் காணலாம். தட்சண கைலாய மான்மியம் சுட்டும் வடமராட்சியில் அமைந்த ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமிகள் கோவிலும் பொன்னாலை வரதராஜா பெருமாள் கோவிலும் யாழ்ப்பாண பெருமாள் கோவிலும் திருகோணாமலை ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலும் களவாஞ்சிக்குடி ஸ்ரீ மகா விஷ்ணு கோவிலும் வந்தாறுமூலை ஸ்ரீ கிருஷ்ணன்

கோவிலும் மகா விஷ்ணுவை மூல மூர்த்தமாகக் கொண்டமைந்தன வாகும். இவை இந்தியாவில் உள்ள வைஷ்ணவ சம்பிரதாயங்க ளுக்கு உரிய வகையில் செயற்படுவதில்லை. மேலும் இவ்வாலய பூசகர்கள் வைஷ்ணவ ஆசாரியார்களாக இல்லாது சைவ மரபுக்குரி யவர்களாகவே உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமிகள் கோவிலில் சிவ வழிபாட்டிற்குரிய திருநீறும் வைஷ்ணவ மரபிற்குரித்தான நாமமும் வழங்கப்படுதல் இன்றும் காணலாம். மேலும் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமிகள் கோவிலில் பெருமாளின் சக்கரத்தையே மூலஸ்தானத்தில் வைத்து வழிபடுதல் காணலாம். எனினும் இலங்கையைப் பொறுத்தவரை விஷ்ணு கோவில் வழிபாடும் வளர்ச்சியும் சைவத்தோடு இணைந்த தொன்றாகவே மக்களால் கருதப் பெற்று இன்றும் பெரிதும் ஆதரிக்கப்படுதல் அவதானிக்கத்தக்கதாகும்.

விஷ்ணு ஆலயங்கள் போல வைரவர், வீரபத்திரர், நாகதம்பிரான், பெரியதம்பிரான் போன்ற தெய்வங்களுக்கும் பல ஆலயங்கள் விரவியிருத்தல் காணலாம். மேலும் ஒவ்வொரு சிற்றூர்களிலும் பல்வேறான சிறுதெய்வ வழிபாடுகள் நிலவி வந்துள்ளமை காணலாம். பேச்சியம்மன், அடுப்பனாச்சியம்மன், முதலிப்பேத்தியம்மன் போன்ற சிறுதெய்வ வழிபாடுகள் குறிப்பிடத் தக்கன. சில தெய்வ வழிபாடானது குறிப்பிட்ட சமூகங்களுக்குரிய தாகவும் குறிப்பிட்ட குழுமங்களுக்கு உரியதாகவும் அமைந்தமை காணலாம். அண்ணாமார், முதலிகள், ஐயனார், பணிக்கர், காளி, கொத்தி, விறுமர் என்பன இந்நிலை சார்ந்தனவாகக் கொள்ளக்கிடக்கின்றன.

சைவத்தினை விட பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற சமயங்களும் இங்கு நிலவுவது ஏலவே அறிதற்குரிய தாகும். இவ்வாறு பல சமயங்கள் நிலவுகின்ற போதிலும் அரச ஆதரவானது பௌத்த சமயத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு

முன்னர் இருந்தது போன்று இன்றும் பெரிதும் தொடர்வது குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய கோவில் கலாசாரத்தினை நோக்குகின்றபோது இன்று பதியப்பட்டதான பெரியதும் சிறியதுமான கோவில்களாக 5749 இந்துக்கோவில்கள் இருப்பது அறிதற்குரியது.[13] இதனை விட பதியப்படாத கோவில்களையும் இணைத்தால் எழாயிரத்திற்கு மேற்பட்ட தொகையாக இருத்தல் சாத்தியமாகும். கடந்த காலங்களில் இந்து சமய வளர்ச்சில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களமானது சமய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் தம்மாலான பணிகள் சிலவற்றை அரச நிதியுதவியுடன் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கன. சமயக் கல்வியினை விரிவுபடுத்தும் வகையில் அறநெறிப் பாடசாலைகளை ஊக்குவித்தல், சமயம் சார்ந்த நூல்களை, இதழ்களை வெளியிடுதல், கருத்தரங்குகள், ஆய்வரங்குகளை நிகழ்த்தல், கோவில்களைப் பராமரித்தல் போன்ற சேவைகளை ஆற்றிவருதல் குறிப்பிடத்தக்கதாகும். ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் ஆங்கில பாடசாலைகளின் வளர்ச்சியின் பின்புலத்தில் அமைந்த மத மாற்றத்தைத் தடுத்தலைக் கருத்தில் கொண்டு சைவப்பற்றுக் கொண்ட அபிமானிகளின் முயற்சியால் பல சைவப் பாடசாலைகள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பணியில் குறிப்பிடத்த பங்காற்றியவராக இந்துபோட் இராசரத்தினத்தை குறிப்பிடுவது முக்கியமான தொன்றாகும். சைவசமய எழிச்சிக்கு எவ்வகையில் நாவலர் அவர்கள் முதன்மைக்குரிய ஐந்தாம் குரவர் என அழைக்கப்படு தகைமைக் குரியவராக அமைந்தாரோ அதேபோல சைவக் கருத்தியலின் கட்டமைப்பு வளர்ச்சிக்கு வழி சமைத்தவராக இந்துபோட் இராசரத்தினம் (1884-1970) விளங்கினார். கிறிஸ்தவ மிசனரி மாரினால் பல வேதநிலை சார்ந்த பாடசாலைகள் உருவாக்கம் பெற்ற போது இந்துக்கள் தமது சமய நிலை சார்ந்து

---

[13] இந்து சமய கலாசாரஅலுவல்கள் திணைக்களகத்து புள்ளிவிபரத் தகவலின் பிரகாரம் மார்கழி 24ந் திகதி 2013ல் பெறப்பட்டது.

கல்வி கற்க வாய்ப்பில்லாதிருந்தது. இச் சூழ்நிலையில் சைவப் பிள்ளைகள் தம் சமய நிலைக்கமைவாகக் கல்வி கற்பதற்கு ஏதுவாக சைவப் பாடசாலைகள் உருவாக்கம் பெறவேண்டும் எனும் சீரிய சிந்தனையின் விளைவாகப் பலவிடங்களிலும் பல பாடசாலைகளின் தோற்றத்திற்குக் கால்கோளாக விளங்கியவர் எனும் பெருமைக் குரியவராக இராசரத்தினம் விளங்கினார். இவரது முயற்சியின் பெறுபேறாக சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் தோற்றம் 1923ல் கண்டது. இப்பணியில் சேர்.பொன்னம்பலம் இராமநாதன், சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், டபிள்யூ. துரைசாமி, எஸ் இராசரத்தினம் போன்றோரின் பங்கும் சுட்டத்தக்கதாகும். இதன் விளைவாக ஏறத்தாழ நூற்றம்பது சைவப்பாடசாலைகள் தோற்றம் பெற்றன. மேலும் சில பாடசாலைகள் நிதியுதவியினைப் பெற்றன. இப் பாடசாலைகள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மாத்திரமன்றி இலங்கை யில் பல திசைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டு கல்வி வளர்ச்சிக்கு வழிசமைத்ததெனலாம். இவரின் முன்மாதிரியுடன் சைவசமயம் சார்ந்த கல்வி நிலை குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குரியதாயிற்று. எனினும் அவற்றின் நிலைபேறும் செல்வாக்கான செயற்பாடும் பாடசாலைகள் பலவும் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் மந்த நிலையை அடைந்தன வென்பதும் சுட்டுதற்கு உரியதாகும்.

இராமநாதன் பலதிறப்பட்ட அறிவியல் துறையில் புலமையும் புகழும் பெற்றவர். மேலும் சட்டநுட்ப அறிவும் அரசியல் ஞானமும் கொண்டிருந்த போதிலும் ஆன்மிக நாட்டமும் சைவ தமிழ்ப் பண்பாட்டு ஈடுபாடும் கொண்டு செயல்பட்டவராக விளங்கினார். சைவமும் ஒழுக்கமும் சார்ந்த கல்வியை வளர்ப்பதிலும் இது தொடர்பான நிறுவனக் கட்டமைப்புக்களை உருவாக்குவதிலும் அயராது உழைத்தவராக விளங்கினார். சைவபரிபாலன சபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம் போன்றனவற்றின் உருவாக்கத்தில் பங்கு கொண்டவராக விளங்கியவர். சைவம் போல பௌத்தமும்

நலிவுற்ற வேளை பௌத்த பிரமஞானசங்கம் அயராது உழைத்தது. அச் சங்கத்தின் பெருளாளராகவும் இராமநாதன் கடமையாற்றியது அவரது சமரச மனப்பான்மையையும் எடுத்துக்காட்டவல்லது[14]. பல மொழிப் புலமை கொண்ட இவர் சைவத்தின் பெருமையினைக் கடல் கடந்த நாடுகள் பலவற்றிலும் தெளிவுறத் தமது பேச்சாற்ற லினால் சிறப்பித்தவராகக் காண்கின்றோம். இவ்வகையில் இராம நாதன் போலப் பலரின் பங்களிப்பினால் இந்து சமயமானது எவ்வ கையான வளர்ச்சியினையும் சிறப்பினையும் பெற்றதென்பதனை இவ் வுரையானது எடுத்தாள முற்படுவதாகும். சேர். பொன். இராமநாதன் தனது பங்கிற்கு ஆண்கள், பெண்களுக்கென்று இரு கல்லூரிகளை, அதாவது பரமேஸ்வராக் கல்லூரியை ஆண்களுக்கும் பெண்களுக்கென்று இராமநாதன் கல்லூரியையும் ஸ்தாபித்தார். மேலும் கல்வி கற்கும் மாணவர்களின் சமய வழிபாட்டிற்காக இரு கல்லூரி வளாகத்திலேயே சிவனாயத்தினை நிர்மாணித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் வேறு எவ்விடத்திலும் இல்லாத வகையில் இவ்விரு ஆலயங்களும் தெற்கு வாசலைக் கொண்டதாகவும் மூலஸ்தான மூர்த்தி பீடம் உயர்ந்த நிலையில் அமைக்கப்பட்டதாயும் விளங்குகின்றன. இங்கு தட்சணமூர்த்தி தெற்கு நோக்கிய தன்மையை உணர்த்தி நிற்பது போலவும் பாடசாலை மாணவர்கள் மேலங்கியுடன் வந்து தரிசிக்கும் வகையில் மூலமூர்த்தங்கள் உயரஅமர்ந்திருப்பதும் இராமநாதனின் நுட்ப அறிவைக் காட்ட வல்லதாகும். அன்றைய காலத்தில் இராமநாதனின் கல்லூரிகள் சமய, தமிழ்ப் பண்பாட்டை இறுக்க மாகப் பேணிய கல்லூரிகளாக விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். படித்த கிறிஸ்தவ குடும்பத்தினர்கள் தங்கள் பிள்ளைகளை விருப்பமுடன் இராமநாதன் கல்லூரில் இணைத்து கல்வி கற்பிக்க

---

[14]சிவசாமி.வி, சேர்.பொன்னம்பலம் இராமநாதனின் சமய, கல்விசார் பங்களிப்பு - ஒரு வரலாற்று நோக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளிவிழா கருத்தரங்குக் கட்டுரைகள், யாழ்ப்பாணம்.1995. ப.200

முற்பட்மை இக்கல்லூரிகளின் சிறப்பினைப் பறைசாற்றத் தக்க உதாரணங்களாகும். அவரது நிர்வாகத் திறனும் சமயநூலறிவும் அன்றைய சமயவியல் சிந்தனையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அளப்பரிய வகையில் பங்களித்தன.

யாழ்ப்பாணத்தில் சைவ சித்தாந்த வளர்ச்சிக்குப் பலர் பங்காற்றியது போலக் கிழக்கிலும் சிலரது பங்களிப்பானது குறிப்பிடத்தக்கவகையில் அமைந்தமை சுட்டத்தக்கதாகும். அருணாசல தேசிகர், பண்டிதர் பூபாலபிள்ளை, சரவணமுத்துப் பண்டிதர் போன்றோர் நூல்கள் யாத்தது முதல் சைவசித்தாந்தக் கருத்துக்களைப் பிரபல்யப்படுத்தியவர்களாக விளங்கினர். அருணாசலத் தேசிகரை பொதுவில் மட்டக்களப்பு நாவலர் என அழைக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் நாவலர் ஆற்றிய பணியைப் போல கிழக்கிலும் செயற்படுத்தியவராக எடுத்தாளப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். திருகோணாமலையில் வாழ்ந்த பண்டிதர் வடிவேல் ஐயா அவர்கள் ஆசிரியராக விளங்கியதோடு திருக்கரைசைப் புராணத்திற்கு விளக்கவுரையொன்று எழுதியதுடன் திருமலை சைவ வழிபடுதலங்கள் பற்றிப் பல்வகைத் தகவல்களை ஒழுங்குபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான சூழ்நிலையில் சைவசமய வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் பங்களிப்பும் எடுத்தாளத்தக்கனவாகும். நாவலரின் சைவசித்தாந்தப் புனர்நிர்மாணத்தைத் தொடர்ந்து சமயத்தை ஆதரிக்கும் பல்வேறு சபைகள் தோன்றின. ஏலவே சைவவித்தியா அபிவிருத்திச் சங்கம் பற்றிச் சுட்டப்பட்டது. அதுபோல யாழ்ப்பாண சைவபரிபாலன சபையும் காத்திரமானதொன்றாக அமைந்தது. நாவலர் வண்ணார் பண்ணையில் ஒரு ஆங்கிலப்பாடசாலையை ஆரம்பித்து அதற்கு அரசாங்கம் உதவ மறுத்தபோது, சைவ பரியாலனசபையே நாவலரின் கருத்துக்கு நடைமுறை வடிவம் கொடுத்ததெனக் கைலாசபதி சுட்டுவது இங்கு அவதானிக்கத்

தக்கதாகும்.[15] நாவலர் காலத்தில் அவரது சமயப்பணிகளுக்குப் பெரிதும் களமமைத்துக் கொடுத்ததில் அன்றைய வண்ணை வைத்தீஸ்வர ஆலய நிர்வாகத்திற்குப் பெரும் பங்குண்டெனலாம். நாவலரது ஆளுமைச் சிறப்போ அல்லது வைதீஸ்வர நிர்வாகக் கட்டமைப்பின் சிறப்போ நாவலரின் சமயப் பிரசங்கங்கள் முதலாகச் சைவசமய புனர்நிர்மாணத்துக்கு வழிசமைத்த தெனலாம். அவரைத் தொடாந்து அவர் மருகர் ந.ச. பொன்னம்பலபிள்ளை அதேயிடத்தில் கந்தபுராணபடனம் செய்து வந்தார்.

அதுபோல பிற்பட்ட காலங்களில் தெல்லிப்பழை துர்க்கா ஆலய நிர்வாகச் சிறப்பு சமய சிந்தனையின் விழிப்புணர்வுக்கும் சமயநெறி முறையின் ஒழுக்காற்று நிலையில் சமூகப் பிரக்ஞை கொண்ட செயற்பாடுகளிற்கும் பெரும்பங்காற்றின என்பது குறிப்பிடத் தக்கதாகும். இதில் முக்கிய பங்காளியாகத் துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாகுட்டியவர்கள் இடம் பெறுகிறார். இது போல யாழ்ப்பாணத்தின் திருஞானசம்பந்த ஆதீனத்தின் முதலாவது முதல்வராக விளங்கிய மணிஐயர் என அழைக்கபட்ட ஞானசம்பந்த தேசிக பரமாசாரியாரும் குறிப்பிடத்தக்கவகையில் சைவசமயத்தினை மக்களிடையே பிரபல்யப்படுத்தியவராக இனங் காணப்படுகிறார். அது தொடர்ந்து இயங்குவதற்குக் கொழும்பு இந்துமன்றமும் தன் பங்கை ஆற்றுகின்றது.

சைவசமயக் கல்வி, சமயப் பிரசங்கங்கள் என்ற வழி முறையில் எழுந்த கல்வி நிறுவனமாக அடுத்துக் குறிப்பிடத்தக்கது திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையாகும். இக்கலாசாலை யானது சமயக்கல்வியின் பரம்பலுக்கும் சமயவியல்சார் கருத்தியல் வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியது. சைவாசிரியர் கலாசாலையில் முதன்மை பெற்றவர்களாக மூவர்

---

[15] கைலாசபதி,க.2010, தமிழரிடையே மொழி பண்பாடு பற்றிய உணர்வு. கூடம், காலாண்டு இதழ், இதழ்15 பக்.75-76

குறிப்பிடத் தக்கவர்களாவர். மயிலிட்டி சி.சுவாமிநாதன், அளவெட்டி பொ.கைலாசபதி, மட்டுவில் சி.கணபதிப்பிள்ளை ஆகியோரே குறிப்பிடத்தக்க பேராசான்களாகக் கருதப் பெறுபவர்களாகும். இதில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை சிறப்புபெறும் வகையில் ஆசிரிய மாணவர்களுக்குப் போதித்தவரென்பதிலும் பார்க்க பண்டிதமனியின் மாணவர் பரம்பரையொன்றை உருவாக்கியவராக விளங்கினார். ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் பண்டிதமணியின் மாணவராக இல்லாத ஆசிரியர்களைக் காணமுடியாதவொரு சூழல் அமைந்ததென்பது பண்டிதமணியின் செல்வாக்கினையும் அவரது புலமையின் ஆழத்தையும் எடுத்துக்காட்டப் போதியதாகும். மேலும் பண்டித மணிக்கும் அவரது மாணவர்களுக்குமிடையில் நிலவிய உறவானது சிறப்பித்துச் சொல்லும் தரத்தில் இறுக்கமானதென்பது சுட்டத்தக்க தாகும். நாவலரது காலத்தில் சிறப்புற்ற புராணபடன நிகழ்ச்சி யானது தமிழகத்தில் இல்லாத ஒன்றாகவும் இன்றும் ஈழத்தில் சைவத்தோடு கலந்த ஒரு நிகழ்வாக விளங்குகின்றது. சமய வழிபாட்டில் இலயித்த மக்கள் இறைவன் புகழ்பாடும் கந்த புராணத்தைப் பாட்டும் பயனுமாகச் செவிமடுத்து தூய்மையும் இன்பமும் அடைவதற்கு அன்றைய புராணபடன நிகழ்வுகள் வாய்ப்பளித்தன. சைவ பாரம்பரியத்தில் ஈடுபாடு கொண்ட இலங்கையர்கள் சைவசித்தாந்த தத்துவப் பொருளை உணர்ந்து சமயத்தைக் கடைப்பிடிப்பவர்களாக விளங்கினர் எனப் பண்டிதமணி கருதினார். சைவசித்தாந்த நுண்பொருளைத் தெளிவுற அறிந்து கொள்ளும் சிரத்தை அவர்களின் செயற்பாடுகளில் விளங்கிற்று. இதனாலேயே கந்தபுராணத்தைப் பெண்களுள் அறியாதார் இலர் எனப் பண்டிதமணி சுட்டுதல் காணலாம். நாவலர் தமது காலத்தில் சைவத்திற்கு வந்த இடுக்கண்ணை நீக்க அரும்பாடுபட்டார். குறிப்பாக நாவலருக்குச் சைவசித்தாந்த உணர்ச்சி எங்கிருந்து வந்தது எனப் பண்டிதமணி வினாவியதுடன் அதற்குக் காரணம் கந்தபுராணத்திலிருந்ததே எனக் குறிப்பிடுகிறார். “அதை அவர் அறி

யாமலிருக்கலாம்; கந்தபுராணம் அவர் இரத்தத்தில் ஊறியிருந்ததே" எனச் சுட்டுதல் காணலாம். இதனாற்போலும் யாழ்ப்பாணத்து நிலைதனைச் சுட்டுகையில் கந்தபுராண கலாசாரம் எனப் பண்டிதமணி சிலாகித்துச் சொல்வது காணலாம். சைவசித்தாந்த நுண்பொருளை அறிந்து கொள்வதில் கந்தபுராணம் பெரிதும் உதவியிருக்கின்றது. சைவசித்தாந்தத்தில் இறைவனை ஆன்மாக்கள் அடைதல் நிலையை 'தாடலை' என்றும் 'காறலை' என்றும் உவமான முறையில் சித்தாந்த இலக்கியங்கள் சுட்டுவது காண லாம். இங்கு உண்மையில் ஆன்மாக்கள் தாடலையெனும் உவ மான நிலையில் இறைவனை இணைவது சாத்தியமில்லை. குறியீ ட்டு நிலையில் விளக்குமுகத்தால் இவ்வுதாரணம் எடுத்தாளப்படு தலே பொருத்தமானதாகும். அதுபோல கந்தபுராண உண்மைகள் எனும் போது அது முருகன் பற்றிய செய்தியோடமையாது சைவ சித்தாந்த நுண்பொருளைக் கதை வடிவில் குறியீட்டு முறையில் நுட்பமாக விளக்குவதுடன் பிற தரிசனங்களான உலகாயுதம், நிரீச் சுரவாத சாங்கியம், மீமாஞ்சை முதலியன கண்டிக்கப்படுகின்றன.

சைவாசிரிய கலாசாலையின் உப அதிபராக விளங்கிய பொ. கைலாசபதி (1902-1961) அவர்களின் பங்களிப்பானது சித்தாந்தக் கருத்தியல் வளர்ச்சிக்கு ஒரு மைல்கல்லாக அமைந்தது. கைலாசபதியின் சிந்தனைகள் பண்டிதமணியினால் முப்பத்திநான்கு (34) குறிப்பேடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. அன்றைய வேளை அதனைப் பண்டிதமணி முழுமையாக் புரிந்து கொள்ளாதுவிடினும் தனக்கு விளங்காதவைகளையும் ஒதுக்காமல் பிற்பட அது பயன்படவல்லதெனக் குறிப்பிட்டுப் பதிவு செய்தமை காலத்தால் போற்றப்பட வேண்டியதே. பொ. கைலாசபதியின் சிந்த னைகள் கற்றோர் உலகறிய வைத்த பெருமை யாழ்ப்பாணப் பல்க லைக்கழகத்திற்குரியதாகும். "கைலாசபதியும் பொருளாராய்ச்சியும்" (1994) "பொ.கைலாசபதியின் சிந்தனைகள்" (1994) எனும் இரு

தொகுதியினை வெளியிட்டனர். மேலும் பண்டிதர் மு. கந்தையா வினைக் கொண்டு பொ. கைலாசபதியின் எழுத்துக்களைப் படித்து 'சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி' (1998) எனும் நூலை பதிப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பணியில் முழுமையாக உழைத்தவர்கள் பேராசிரியர் எஸ்.சுசீந்திரராசாவும் பண்டிதர் மு. கந்தையாவுமாகும். இப் பணிக்கு ஒத்தாசை புரிந்தவர்களில் முன்னாள் அதிபர். ஆ. சபாரத்தினமவர்களும் குறிப் பிடத்தக்கவர்களாவர். சைவ சித்தாந்தத்தின் மனதத்துவச் சார்பான மனேவிருத்தி, புத்தி விருத்தி, அஹங்கார விருத்தி பற்றி விரித்து விளக்கிய பெருமை பொ. கைலாசபதிக்குரியதாகும். இற்றைவரை க்கும் தென்னிந்தியாவின் சிந்தனை யுலகிற்குப் புதியதான கருத் தியலாக அமைந்ததுடன் இன்னும் பல்வேறான ஆய்வுகளுக்கு இச் சிந்தனை வழிகோலியுள்ளமை இக்கருத்தியலின் செழுமையைப் பறைசாற்ற வல்லதாக அமைகின்றது. இது தொடர்பாகச் சில ஆய் வுகளும் நூல்களும் இதுவரை வெளிவந்தமை சுட்டுதற்குரிதாகும்.

சமகாலப் பகுதியில் சைவத்தமிழ் கல்வி முறையும் புராணபடனமுறையும் சுன்னாகம் குமாரசாமிப்புலவர், கணேசையர், புலோலி கதிரைவேற்பிள்ளை, புலோலி சிவபாதசுந்தரம், முத்துக்குமாரசாமிக் குருக்கள், போன்றாரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது காணலாம். மேலும் சிவஞான சித்தியாருக்கு உரையெழுதிய திருவிளங்கம், துகளறுபோதத்திற்கு உரையாத்த ஈசான சிவன் எனும் திக்கம் செல்லையாபிள்ளை, திருவருட் பயனுக்கு உரையெழுதிய சிவபாதசுந்தரம், பண்டிதர் மு.கந்தையா போன்றோர் சித்தாந்தவறிவூடாக சமயவறிவின் செல்நெறிக்குப் பங்களித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர். பண்டிதர் கந்தையா சித்தாந்த சாஸ்திரங்களுக்குத் தெளிவும் விளக்கமும் கண்ட வகையில் பல நூல்களை யாத்ததுமன்றிச் சித்தாந்தச் சிந்தனை களைத் தெளிவுற விளக்கிய சிந்தனையாளராகவும் சமகாலத்தில்

விளங்கிய இறுக்கமான சமயவாதியாகத் திகழ்ந்தவராவார். சைவப் புலவர் சங்கமும் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சைவசித்தாந்த வகுப்புக்களை நடாத்தியும் சித்தாந்த பண்டிதர் பரீட்சைகளை வைத்து சமயக் கல்விக்கு பங்களிப்புச் செய்தது.

கிறிஸ்தவ மதமானது நிறுவன மயப்பட்ட அமைப்பிற் குரியதாக விளங்குவதன் காரணத்தால் அவ்வமைப்போடு தொடர் புடைய மேலைநாட்டு அமைப்புக்களின் வழி தாராளமான நிதியுதவியினைப் பெற்று செயற்படக்கூடிய வாயப்பைப் பெற்றது. இஸ்லாமிய மதமும் செல்வச் செழிப்புடைய சீமான்களாலும் பின்னர் அரேபிய நாட்டவர்களின் அரவணைப்பாலும் செழிப்பான வகையில் வளர்ச்சிக்குரியதாயிற்று. இவை போலச் சைவமானது நிதிச் செல்வாக்குடைய நிறுவனமயமான அமைப்புக் கொண்டதாக விளங்காமை குறிப்பிடத்தக்கதாகும். சைவத்தைப் பொறுத்த வரையில் கடந்த சில வருடங்களாகச் சைவ ஆலயங்களின் புனருத்தாரணத்திற்கு அரச ஆதரவு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைத்தாலும்[16] போர் அனர்த்தங்களினால் அழிந்த பல ஆலயங் களும் ஆலயங்களின் பெறுமதி மிக்க தேர், இறைவனின் உருவச் சிலைகள் பவனி வரும் வாகனங்கள் போன்ற பொருட்கள் மீளப் புதுப்பிக்கப்படுவதிலுள்ள இடர்ப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றன. பௌத்த விகாரைகள் நிர்மாணம், பௌத்த பிக்குகள் கல்வி வளர்ச்சி, அபிவிருத்தி, பௌத்த சாசன அபிவிருத்தி, பௌத்த, பாலி மொழிப் புலமை விருத்தி போன்ற இன்னோரன்ன செயல்பாடுகள் மிகுந்தளவில் அரச ஆதரவோடு ஆற்றப்படுகின்ற வேளை இதர சமய வளர்ச்சியானது மட்டுப்பாடுகளுடன் முன்னெ டுக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்விடத்தில் இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியன வெளிநாட்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன்

---

[16]இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கடந்த எட்டு வருடங்களில் ஆலய கட்டுமானம், சீர்திருத்தம் போன்றவற்றிற்காக 48 கோடி ரூபா பணத்தினை வழங்கியதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அபிவிருத்தியடைய இந்து சமயமானது அவ்வாறான வாய்ப்பினை அதிக அளவில் பெறவில்லையென்றே கூறவேண்டும். எனினும் அரச ஆதரவின்றி கோவில் சார்ந்த பரிபாலன சபைகள் சிலவும் சில தனிமனித முயற்சியிலான வெளிநாட்டு நிதியுதவிகளும் இணைந்து சில ஆக்கபூர்வமான சமூகச் செயற்பாடுகளில் சமீப காலங்களில் ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான முயற்சிகளி னால் பதிப்பகங்கள், கல்யாண மண்டபங்கள், பொது மண்டபங்கள், சிறுவர் நலவாழ்வகங்கள், முதியோர் இல்லங்கள், கல்விச் சாலைகள், ஊனமுற்றோர் வாழ்வகங்கள் போன்றன மட்டுப்பட்ட வசதிகளுடன் எழலாயின. இவ்வாறான சமூகப்பணிகள் தொடங்கப் பட்டாலும் நாட்டில் எழுந்த அனர்த்தங்களின் பெறுபேறாகத் தேவைகள் அதிகவளவில் அதிகரித்துள்ளன. சமூக சேவைகளு க்கும் அவற்றின் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கும் போதிய நிதி என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது. மேலும் இந்தியாவில் உள்ள பல ஆலயங்கள் மடங்கள் நிர்வகிப்பது போலப் பாரிய அளவில் அரசகட்டுப்பாடும் நிறுவனமயப்பட்ட அமைப்புக்கள் அல்லது காத்திரமான நிதி வளம் ஆகியன இங்கில்லை என்பது மனங் கொள்ளத்தக்கதாகும்.

## வேதாந்த நெறியும் இராமகிருஷ்ண மடமும்:

இலங்கையில் சைவசித்தாந்த நெறி செழித்து விளங்கிய போதிலும் வேதாந்தச் சிந்தனையும் செல்வாக்குக்குரியதாக விளங்கியமை காணலாம். இந்தியாவின் சமகாலச் சிந்தனையில் வேதாந்த மெய்யியல் பெற்ற செல்வாக்கின் அளவு இங்கு அமையவில்லை. இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே, அதாவது 1948ற்கு பின்னரே இலங்கையில் இராமகிருஷ்ணமடம் தீவிரமாகச் செயற்பட ஆரம்பித்ததெனலாம். அமெரிக்காவில் 1892ல் சிக்கா கோவில் நடந்த அகிலஉலகச்சமய மகாநாட்டில் விவேகானந்தர் பங்கு பற்றிவிட்டு வரும் வழியில் இலங்கைக்கு வருகை தந்ததுடன்

பதினொரு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்தார். அவ்வேளையில் பல்வேறு இடங்களில் விவேகானந்தர் சமயச் சொற்பெருக் காற்றினார். இதன் பின்னர் கொழும்பிலும் பிற்பட மட்டக்களப்பிலும் இராமகிருஷ்ண மடம் நிறுவப்பட்டமை காணலாம். இராமகிருஷ்ண மடத்தின் நிர்வாகமானது இன்றும் இந்தியாவில் உள்ள கல்கத்தாவின் தலைமை மடத்தின் வழிகாட்டலுடனேயே நிர்வாகிக் கப்படுதல் காணலாம். கொழும்பில் உள்ள இராமகிருஷ்ண மடத்தின் தலைமையினையும் அவர்களே தீர்மானிப்பதனைக் காணலாம். இம் மடச் செயற்பாட்டில் பங்குபற்றும் பெரும்பாலான இந்துக்கள் வேதாந்தச் சிந்தனையினையும் கருத்துக்களினையும் பின்பற்றும் வகையில் புதிய இந்துக்களாக (Neo - Hinduism) விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். 1940 களில் பாடசாலை இறுதி வகுப்புகளில் சமயக் கல்வி இடம் பெற்றபோது வடநாட்டு வேதாந்த சார்புடைய பாடத்திட்டம் இந்து மதம் - மாற்றுப் பாடத்திட்டம் (Hinduism - alternative syllabus) என்ற பெயரில் இடம் பெற்றது. சிவபாதசுந்தரம் போன்ற சைவசித்தாந்திகள் இந்துமதம் (Hinduism - Saivism) என்ற பெயரில் தமது பாடத்திட்டத்தை நடாத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

1969ல் புனித அன்னை சாரதாதேவியின் பிறந்த தினத்தில் ஸ்ரீ சாரதா தேவி சேவாச்சிரமொன்று பருத்தித்துறை நகரில் ஸ்தாபிக்கப்பட்டது. இன்றுவரை இயங்கும் இந் நிறுவனமானது கொழும்பில் விளங்கும் இராமகிருஷ்ண மடத்தின் நிர்வாகத்திற்குக் கீழ் அமையவில்லையெனினும் அவர்களின் உபசாரம் விரிந்திருக் கின்றதென்பது விவேகானந்தரின் நூற்றாண்டு நிகழ்வுகளில் கல்கத்தா, சென்னை, கொழும்பு ஆகிய இடங்களிலிருந்து இங்கு வந்த இராமகிருஷ்ண சுவாமிகளின் வருகைவழி தெளிவிற்குரிய தாகும். மேலும் இவர்களது சமயச் செயற்பாடுகளும் சேவைகளும் மேற்சுட்டிய நிறுவனங்களின் போக்கிற்கு இணையானதாகவே

விளங்கி வருவது சுட்டத்தக்கது. இதுபோல யாழ்பாணத்தில் இயங்கும் இராமகிருஷ்ணாலயமும் விளங்குவது குறிப்பிடத்தக்க தாகும். விவேகானந்தர் யாழ்ப்பாணத்திற்கு வந்த பிற்பாடு இராமகிருஷ்ண மடத்தின் கிளையொன்றினை ஆரம்பிக்க சிலர் முயற்சித்த போதிலும் கடும்போக்குடைய சைவர்களின் எதிர்ப்பினால் அன்று கைகூடவில்லை. அண்மைக்கால அனர்த்த ங்களுக்குப் பிற்பட இராமகிருஷ்ண மடத்தொண்டுகள் உரும்பிராய், கிளிநொச்சி, விஷ்மமடு, காரைதீவு போன்ற இடங்களில் தற்காலிமாகச் சென்று மனிதநேயத் தொண்டாற்றுவதைக் காணலாம். சமீப காலமாக கொழும்பிலுள்ள இராமகிருஷ்ண சுவாமிகளே சைவசமயத்திற்குரியவராக அரச நிகழ்வுகளில் பங்கெடுப்பதும் யாழ்ப்பாணத்தில் சைவத் தலைவராக நல்லைக் குருமகாசந்நி தானம் கணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மட்டக்களப்பில் அமைந்த இராமகிருஷ்ணமடமானது பல சமூக சேவைகளை விரிந்தவகையில் செயல்படுத்தியமை காணலாம். மேலும் கிழக்கு மாகாணத்தில் விபுலானந்தரின் பணியும் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்தமை சுட்டத்தக்கதாகும். இதனாலேயே இருபத்திநான்கு பாடசாலைகள், உயர்ஆய்வு நிறுவனங்கள் இவரது பெயரால் நடைபெறுதல் சுட்டத்தக்கதாகும். இராமகிருஷ்ணமடத்தின் பணி போல வேதாந்தச் சிந்தனையை வளர்க்கும் நிறுவனமான பின்னாட்களில் சின்மயானந்த நிறுவனமும் குறிப்பிடத்தக்க தொன்றாக விளங்கியமை சுட்டத்தக்கதாகும். 1979ல் கொழும்பிற்கு வருகை தந்த சின்மயானந்த சுவாமிகளின் வருகைக்குப் பிற்பட சின்மயானந்த சபையினரின் ஆன்மிகப் பணியானது அவரின் சீடர்களால் வழிநடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். கொழும்பு, திருகோணாமலை, நுவரேலியா, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் அவர்கள் பணி விரிந்தமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வேதாந்தமும் சித்தர்மரபும்:

இராமகிருஷ்ண மடத்தின் செல்வாக்கும் சித்தர் பலரின் பங்களிப்பும் வேதாந்தச் சிந்தனை மரபில் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் குறிப்பாக, யாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு, நுவரேலியா போன்ற விடங்களில் வெவ்வேறுபட்ட காலங்களில்பல சித்தர்கள் வாழ்ந்தமையை அறியக்கூடியதாகவுள்ளது. ஆரம்பகாலச் சித்தர்கள் பற்றிய செய்திகள் எதுவும் ஆவணப்படுத்தப்பட்ட வகையில் கிடைத்திலது. பெரும்பாலான சித்தர்களுக்கு இந்தியத் தொடர்பிருந்தமை காணலாம். யாழ்ப்பாணச் சித்தர் மரபானது கடைச்சாமியருடன் (-1891) ஆரம்பிப்பதாகக் காணலாம். இவர் பெங்களூரில் நீதிபதியாகக் கடமையாற்றிவிட்டு பின் இந்தியாவை விட்டு இலங்கையில் வாழ்ந்தவராவர். இவர் சக்தி வாய்ந்த சித்தராகவும் பலருக்குக் குருவாகவும் இருந்தார். பரமகுருசுவாமி (-1904), சின்னத்தம்பிசுவாமி / சாஜன்றசுவாமி (-1908), குழந்தைவேற்சுவாமி (-1908), செல்லப்பா சுவாமி (-1915), கனகரத்தினம் சுவாமி (-1922), இராமநாதர் அருளம்பலசுவாமி (1895 - 1925), பெரிய சன்னியாசியார் (1860 - 1917), மகாதேவ சுவாமிகள் (1874 - 1942), சி.வே.அருளம்பல சுவாமிகள் (1880 - 1942), நயினாதீவு சுவாமிகள் (-1946), கடப்பைச் சுவாமி, யோகசுவாமிகள் (1872 - 1964), இராமலிங்கம் சுவாமிகள், கடைவரத சுவாமிகள், சின்னச் சுவாமி, குடைச்சுவாமி, பொன்னையன் சுவாமி, முருகேசு சுவாமி, சுந்தரம் சுவாமி, வடிவேற் சுவாமி (1906 - 1990), அம்பலவாணர் சுவாமி (1920 - 1978), சச்சிதானந்த சுவாமி (1974 - 1960), ஜேர்மன்சுவாமி (கௌரிபாலா), ஹாவாய் சுப்பிரமுனிய சுவாமி (1927 - 2001), ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்களாவர். இவர்களைவிட செல்லாச்சி (1863 - 1929), சடையம்மா (1865 - 1936) ஆகிய பெண்மணிகளும் குறிப்பிடத்தக்கவர்களாவர். நவநாத சுவாமி, பெரியயானைக்குட்டி

சுவாமி, சித்தானைக் குட்டிச் சுவாமி, ஆனைக்குட்டி சுவாமி, தாளையான் சுவாமி ஆகியோர் இலங்கையின் இதர பாகங்கள் வாழ்ந்த சித்தர்களாவர். அவர்களைவிட குரு பாபா மொஹிதீன் சுவாமிகளும் சூபிச நெறிவழி நின்றார்.[17] இவர் வேதாந்தச் செல்வாக்குக் கொண்டவராகக் கருதப்படுகின்ற போதிலும் சித்தர் மரபுக்குரியவராக இனங்காணுதல் சாத்தியமாகும். கடைச்சுவாமிகள் எடுத்தாண்ட காலப் பகுதிக்கு முற்பட்டவராகத் திகழ்ந்தாலும் சித்தர் மரபினர் பலருக்கு குருவாக அமைந்ததுடன் அவரது வழி காட்டலிலேயே பலர் எம் காலப்பகுதியில் சமூகத்தில் தாக்கம் புரிந்தமை எடுத்தாளலாம். இவர்களில் பலர் வேதாந்தச் செல்வாக்குக்குரியவர்களாக விளங்கினர்.[18] மகாதேவ சுவாமி, சின்னத்தம்பிசுவாமி / சாஜன்றசுவாமி, கனகரத்தினம் சுவாமி, போன்றோரின் சமாதியாலயங்கள் கந்தர் மடத்தில் மகாதேவ சுவாமியால் ஸ்தாபிக்கப்பட்ட வேதாந்த மடத்தில் இன்றும் வழிபாட்டுக்குரியதாக விளங்குகின்றமை காணலாம். எனினும் இம் மடச் செயற்பாடுகள் இந்தியாவில் நிலவும் மடச் செயற்பாடுகளுடன் ஒப்பிடும் தரத்தில் இன்றில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு காரணம் அங்கு அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர் லட்சக்கணக்கான பரப்பு நிலங்களை அளித்து மடங்களை வளர்த்தனர். இங்கு சில நல்லாரின் ஒருதொகை நன்கொடைகள் மட்டுமே கிடைத்தன.

இச் சுவாமிகளில் யோகசுவாமிகள், கடைச்சுவாமிகள், மகாதேவ சுவாமிகள், அருளம்பலசுவாமிகள் போன்றோர் மக்களின் பேராதரவுக்கு உரியவர்களாக விளங்கினர். இவர்களின் குருபூசை

---

[17] இன்றும் யாழ்நகரிலும் வேலணைச் சாட்டியிலும் அவரது சிந்தனையினை முன்னெடுத்துச் செல்லும் ஒரு அமைப்பிருப்பது குறிப்பிடத்தக்கது.

[18] Gnanakumaran,N (2004)The Development of Vedanta and Buddhism in Sri Lanka during the last fifty years, Padmam, Bavani pathippakam, Jaffna. p. 285

தினங்கள் இன்றும் கொண்டாடப்பட்டு வருதுடன் சில பக்தர்களால் அவர்கள் குருவாக மதித்து செயல்படுதலும் அவதானிக்கத்தக்க தாகும். "குருவே சிவன் எனக் கூறினன் நந்தி" என்பர். சைவமானது இலங்கையில் முதன்மைக்குரியதாக இருந்தபோதிலும் சித்த மரபானது பெரிதும் வேதாந்தம் சார்ந்ததாகவே விளங்கியது. பெரும்பாலான சித்தர்கள் வேதாந்தத்தையே பின்பற்றியவர்களாகத் திகழ்ந்தனர். சிலர் சைவம், வேதாந்தம் எனும் இரு நெறியினையும் இணைத்த வகையில் விளங்கினர். சிலர் எந்த முறைமைக்கும் உரியவர்களாக எடுத்தாள முடியவில்லை. கடைச்சுவாமி, ஆர்.அருளம்பலசுவாமி, சின்னத்தம்பி சுவாமி, யோக சுவாமி, பெரியானைக்குட்டி சுவாமி போன்றோர் கல்வியறிவு பெற்றவர் களாகச் சில காலம் அரசாங்கத்தில் வேலை செய்து பின்னர் இந் நிலையை அடைந்தவர்களாவர். சி.வே.அருளம்பலசுவாமிகள் பதின் மூன்று நூல்களை எழுதியவராக விளங்கினார். பெரும்பாலான நூல்கள் இந்தியாவிலேயே பதிக்கப்பெற்றன.[19] இச்சுவாமியே பாரதியார் போற்றிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என எடுத்தாளப் படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.[20] இவரைவிட யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் என வேறுபட்டவர்களைச் சிலர் இனங்காண முற்பட்ட போதிலும் அதனை நிறுவவல்ல சான்றாதாரங்களை முன்வைக்கத் தவறியமை அவ் வாசிரியர்களின்[21] கருத்துக்களை ஏற்க முடியாத

---

19 ஞானகுமாரன்.நா., பாரதிபோற்றிய அருளம்பல சுவாமிகள், அருளம்பல சுவாமிகள் சபை, வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1994.பக். 42-3

20 மேற்குறிப்பிடப்பட்ட நூல். ப.37.

21 இதுதொடர்பான கருத்தினைக் கலாநிதி குணராசா "பாரதியின் ஞான குரு யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி" எனும் சிறுநூலிலும் தனது உறவினரை எடுத்தாண்டதும் சி.எஸ்.முருகேசன் "பாரதி கண்ட சித்தர்கள்", "புதுச்சேரி சித்தர்கள்" எனும் தனது இரு நூல்களிலும் ஸ்ரீகதிர்வேலு சுவாமிகளே யாழ்ப்பாணச் சுவாமிகள் எடுத்தாண்ட போதிலும் இருவரும் தக்க ஆதாரம் தராதமை அக் கருத்தினை ஏற்க முடியாநிலைக்கு இட்டுச் செல்கின்ற தெனலாம். முற்பட சைவ சமய பாடநூலில் யோகசுவாமிகளின் படத்தின் புலத்தில் யாழ்ப்பாண

நிலைக்குரியதாக்குகிற தெனலாம். சித்தர்கள் ஓர் குறித்த மரபு நிலைக்குள்ளே வாழ்வதோ அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்விய லுக்குள் அடக்கப்படுவதோ சாத்தியமில்லை. அவ்வாறிருந்த போதிலும் இச் சுவாமிகள் எழுதிய படைப்புக்கள் இதர சித்தர்கள் போலன்றி அமைந்தமை சுட்டத்தக்கதாகும். இவர் எழுதிய நூல்களில் சில ஆழமான கருத்தியலை எடுத்தாள்வதாக அமைந்து ள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாகப் பரவெளித் தத்துவம் பற்றிய சிந்தனையானது ஆழ்ந்த ஆய்வுக்குரிய தொன்றாகும். அறிஞருலகத்தாய்வுகளானது இவர் பற்றிய சிறப்பினை வெளிப்படுத்த வல்லதாக அமையலாம்.

### வேதாந்தமும் சத்தியசாயிபாபா அமைப்பும்:

இராமகிருஷ்ண மடம், வேதாந்த மடம், சின்மயானந்த நிறுவனம், சித்தர்மரபு போன்றன வேதாந்தச் செல்வாக்கினைச் சுட்டுவனவாக அமைந்தது போல சத்தியசாயி நிறுவனமும் வேதாந்தச் செல்வாக்கினை வெளிப்படுத்துவதாகவே அமைந்தது. 1967ல் ஸ்தாபிக்கப்பெற்ற இந்நிறுவனமானது ஏறத்தாழ முப்பதாயி ரத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டதாக அமைந்தது. இதில் பல சமயத்தவர்கள் இணைந்து செயலாற்றுவதனைக் காணக்கூடியதாக இருந்தபோதிலும் இலங்கையில் இந்துக்கள், பௌத்தர்களையே அதிகம் அங்கத்தவர்களாகக் கொண்டு விளங்கு கின்றது. இது ஒரு புதிய சமயமாக எடுத்தாளப்படாத போதிலும் இந்து சமயத்தின் மாற்றம் பெற்றதொன்றாக எடுத்தாளப்படுவது பொருத்தமானதாகலாம். சத்திய சாயியின் உரைகள் தெளிவாக வேதாந்த தத்துவத்தினையே அழுந்தியுரைத்தவையாக அமைந்தன. சத்தியசாய் பாபாவின் நாளாந்த பேச்சுக்களில் பகவத்கீதை, உபநிடதங்கள் எளிமைப்படுத்தப்பட்ட வகையில் பெரிதும் விளக்கப்

---

சுவாமியைச் சுட்டியமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் பின்வந்த பதிப்புக்களில் அது நீக்கப்பட்டமை காணலாம்.

பெற்றன. விவேகானந்தரின் நடைமுறை வேதாந்தத்தினின்று வேறுபட்ட வகையில் நுட்பமாக சத்திய சாயிபாபாவின் வேதாந்தச் சார்புடைச் சிந்தனைகள் விளக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க தாகும். பல்வகைப்பட்ட சமூகத்தினருக்கு ஏற்றவகையில் இந்து சமயச் சடங்காசரங்களில் சில தளர்ச்சியினையும் வீரசைவர்கள் பிராமணியத்திற்கு எதிரானமுறையில் குறிப்பிட்ட நடத்தைகளினைப் பசவண்னர் முன்னிறுத்தியமை போன்ற செயல்களும் சத்திய சாயி அமைப்பில் அமைந்திருந்தாலும் மக்கள் சேவைக்கு அழுத்தும் கொடுத்து மனித விழுமியங்களைப் பேணும் தன்மை இக்காலச் செயற்பாடுகளில் முதன்மை பெற்றமை காணலாம். குறிப்பாக நாட்டின் அனர்த்தங்களுக்குப் பிறபட்ட சூழலில் இவர்களின் சமூகப் பிரஞ்ஞையானது சமயங்கடந்த சமூகப்பரப்பினுள் நுழைவதாயிற்று.

## சைவசித்தாந்தமும் வேதாந்தமும்:

சிவபூமி[22] என அழைக்கப்படுகின்ற வகையில் இலங்கையில் சைவ சித்தாந்திகள் இறுக்கமான வகையில் சித்தாந்த மரபினைப் பேணியவர்களாக நீண்ட காலமாக விளங்கினர். தென்னிந்தியாவில் பேணப்படாத புராணபடன முறைமையானது இங்கு சிறப்பாகப் பேணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மரபு வழிவந்த பிரபல்யமான சமயசொற்பொழிவாளரான பண்டிதமனி கணபதிப்பிள்ளையவர்கள் யாழ்ப்பாணக் கலாசாரத்தினைக் கந்தபுராணக் கலாசாரம் என எடுத்துரைப்பது காணலாம். கந்தபுராணமானது வெறும் புராணம ல்லாது மெய்யியலாகவும் சைவசித்தாந்தத்தின் மூலநூலாகவும் அமைந்துள்ளதாகும். மேலும் சைவசித்தாந்தமானது "சுத்த அத்வைத சைவசித்தாந்தம்" எனவும் வேதாந்தச் சித்தாந்தம் (திருமூலர்) எனவும் அழைக்கப்படலாயிற்று. சங்கர வேதாந்தம் அத்வைதத்திற் அளித்த விளக்கத்தினின்று வேறுபட்டவகையில்

22 பத்மநாதன். பேராசிரியர்.சி,(2005) இலங்கையில் இந்து சமயம் குமரன் புத்தக இல்லம், ப.xiii.

சைவசித்தாந்திகள் விளக்கியமை காணலாம். சங்கரர் "அ" எனும் எதிர்மறைக்கு இன்மைப் பொருளில் விளக்கஞ் சுட்ட சைவ சித்தாந்திகள் அன்மைப் பொருளில் விளக்கி நின்றமை சுட்டுதற்குரியது.[23] இவ்வகையில் 'அத்துவிதமாகுஞ் சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கலுற்றாம்'[24] என உமாபதி சிவாசாரியார் சிவப்பிரகாசத்தில் விளக்குதல் நோக்கலாம். பண்டிதமணி இதனை தெளிவாக்குதற் பொருட்டு வேதாந்தம் சுட்டும் ஒருமைநிலையினை சைவசித்தாந்தம் பொருள்பொதிந்த வகையில் விளக்குமாற்றை உரைத்தல் காணலாம்.[25] இந்நிலையின் கருத்து நிலையை திருமூலரும் வேதாந்த சைவசித்தாந்தம், சித்தாந்த வேதாந்தம், வேதாந்த ஞான சித்தாந்தம் எனப் பல தொடர்களால் சுட்டி நிற்பதும் அவதானிக் கலாம். வேதாந்த சிந்தனையானது சிவபூமி என வர்ணிக்கப்பட்ட இத் திருநாட்டில் இந்தியாவினின்று வேறுபட்ட கருத்தமைவிலேயே விரிந்திருப்பது நோக்கத்தக்கதாகும். வேதாந்தச் சிந்தனையினை அழுத்தமாக எடுத்தாளும் இராமகிருஷ்ண மடமும் சைவசித்தாந்தச் சூழலுக்கமைய அரவணைத்து இணைத்துச் செல்வதனைக் காணலாம். அவர்களது பஜனாவளியின் பின்பகுதியில் தேவார திருவாசகமும் ஆள்வார் பிரபந்தங்களும் இடம் பெற்றுள்ளன. இதேபோக்கு சின்மயானந்த நிறுவனத்திடமும் விரவியிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும். வேதாந்த சித்தாந்த சமரசம் காணும் போக்கு இலங்கையில் குறிப்பிடத்தக்கவகையில் விரவியிருப்பதற்குச் சித்தாந்த நெறியில் சைவருக்கிருந்த தெளிவான இறுக்கமான போக்கே காரணமாக் கூறலாம். தாயுமானவர் பாடல்கள் இதனைமுன்னெடுத்தன.

---

23 ஞானகுமாரன், பேராசிரியா.நா, (2012) வேதாந்த மெய்யியல், சேமமடு,கொழும்பு. ப.

24 உமாபதிசிவாசாரியார், சிவப்பிரகாசம் பாடல். 7

25 ஞானகுமாரன்,(1995)பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் சமய தத்துவ நோக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளிவிழா கருத்தரங்குக் கட்டுரைகள், யாழ்ப்பாணம். ப.194

நாவலர் அச்சடிப்பித்தார். அவரே வரணி ஆதீனத் தொடர்புடைய வேதாரிணியவாசி என்ற கருத்துமுண்டு.[26] குறிப்பாக வேதாந்த மடத்திலும் வேதாந்தச் சித்தனையின் அழுத்தத்திலும் பார்க்கச் சமரசப் போக்கே விரவியிருப்பது நுட்பமாக நோக்குவோருக்குப் புலனாகவல்லது. மேலும் இந்தியாவிலுள்ள வேதாந்த நிறுவனங்களில் பெரிதும் இக் கருத்தியலை முன்னெடுப்பவர்கள் பிராமணராக இருப்பதும் ஒரு வலுவான காரணமாக இருக்கலாம் போல் தோன்றுகின்றது.

## இலங்கையில் பௌத்தம்:

இந்திய மெய்யியல் சிந்தனை மரபில் வேதாந்தமும் பௌத்தமும் சிறப்பாகச் சொல்லக்கூடிய உச்சத்திற்குரியரியவை யாகும். இவ் விரு மெய்யியல்களும் ஆன்மிகம் வளர்ந்த ஒரே மண்ணலேயே விளைந்தவைகளாகும். வேதாந்தம் விளைந்த பூமியில் செழித்ததாக அமைய பௌத்தமானது அங்கு பல் வேறுபட்ட காரணங்களால் ஏறத்தாழ கி.பி.1 200 தாழ்வு நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டது. எனினும் இதன் அயல்நாடுகளான இலங்கை, பர்மா, தாய்லாந்து, ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் வளர்ச்சியடைந்தது. மக்ஸ் வெப்பர் புராதன பௌத்தத்தினை விபரிக்கையில் கடவுள் இல்லாத கோட்பாடாக, தெய்வமில்லாத ஒழுக்க இயக்கமாக உள்ள ஒரு சமயமென எடுத்தாண்டமை காணலாம். பௌத்தம் இரு முக்கியமான பிரிவினைக் கொண்டதாக இருந்தது. ஒரு பிரிவானதும் பழைய வடிவமான தேரவாத பௌத்தம் (ஹினயானம்)தென்னாசியாவில் திகழ்வது குறிப்பிடத் தக்கது. தேரவாதம் எனும் பதமானது மூத்தோர் கோட்பாடு அல்லது மூலப் போதனை என விளக்கப்படுகிறது. மூத்த பிக்குகளினால் பேணப்படும் மரபாக விளங்குகிறது. இந்தியாவி

26 குலரத்தினம், க.சி. கா.சுப்பிரமணியபிள்ளை வரலாறும் நூலாராய்ச்சியும். யாழ்ப்பாணம்.

லிருந்து இலங்கை வந்த இப் பிரிவானது பிற்பட பர்மா, தாய்லாந்து, லாவோஸ், கம்போடியா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கும் பரவியதெனலாம். கிறிஸ்தவ காலத் தொடக்கத்தில் மஹாயானம் எனும் புதிய மார்க்கம் தொடங்கியதெனலாம். மஹாயானம் என்பது உயரிய சாதனம் எனப் பொருள்படும். இது நேபாளம், தீபெத், மங்கோலியா, சீனா, தைவான், வியட்நாம், மலேசியா, கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் பரந்திருந்த தெனலாம். மும்மணிகள், புத்தம், தம்மம், சங்கம் ஆகியன பௌத்தர்கள் அனைவருக்கும் பொதுவில் விலக்க முடியாதவை யாகும். இலங்கையில் பௌத்தத்தின் மூலமும் பலமும் பௌத்த சங்கமாக அமைந்தது. இங்கு நான்கு போதிசத்துவர்கள் பௌத்தத்தில் வழிபடத்தக்க நிலையடைந்தோர் என எடுத்தாளப் பட்டமை நோக்கலாம்.

தேரவாத தர்மத்தில் நான்கு வாய்மைகளும், அஷ்டாங்க மார்க்கங்களும் முதன்மையானவையாக விளங்கின. மஹாயானமும் இதனை வலியுறுத்திய போதிலும் கர்மம், நிர்வாணம் எனும் முக்கிய கருத்துக்களை விமர்சன ரீதியாக விருத்தி செய்தன. மஹாயானமும் தந்திராயணமும் பௌத்தத்தின் ஆரம்ப காலத்தி லேயே இலங்கையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டாலும் பெரும் பாலான இலங்கைப் பௌத்தர்கள் குறிப்பாகச் சிங்களவினஞ் சார்ந்தவர்கள் தேரவாத பௌத்தர்களாகவே விளங்கினர். தேரவாத பௌத்த மானது இலங்கை வரலாற்றில் சமய கலாசார வாழ்வில் முதன்மை செலுத்தியது. 1972ல் அமுல்படுத்தப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியல் யாப்பிற்கமைய பௌத்தத்திற்கு அதிஉயர்வான இடம் அளிக்கப்பட்டதுடன் அதனை பாதுகாப்பதும் பௌத்த சாசனத்தை முதன்மைப்படுத்துவதுடன் எல்லா சமயங்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதும் அரசின் கடமையாக எடுத்தாளப் பட்டமை காணலாம். முன்னையகால அரச ஆட்சிகளில் இருந்ததுபோல தேரவாத பௌத்தமானது

பெரும்பான்மை சமூகத்தின் சமயமாக அமைந்ததுடன் பரந்த அளவில் அரச ஆதரவினையும் அரச அந்தஸ்தினையும் பொதுவில் அனுபவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். மாக்ஸீய தலைவர்கள்கூட பௌத்த கிரிகைகளில் வெளிப்படையாக கலந்து 1960களில் தொடர்ச்சியான அரச ஆட்சிக்குரிய தகைமைபோல செயற்பட்டமை சுட்டுதற்குரியது.

**தேரவாதமும் பழமைவாதமும்:**

வலிவித சரணங்காரர் ஒரு தொகை பிக்குகளினால் ஆரம்பிக்கப்பட்ட துறவுக் கல்லூரிக்கு வெற்றிகரமாக தலைமை தாங்கினார். பதினெட்டாம் நூற்றாண்டில் உபாலி தேரரின் தலைமை யில் மல்வத்த விகாரையில் சில தேரர்கள் தங்கியிருந்ததுடன் அதுவே பிற்பட மல்வத்தபீடம், அஸ்கிரியபீடம் என இன்றும் அழைக்கப்படும் முதல்தரமான இரு துறவு மையங்களாக ஏற்கப் பட்டன. சியாம் அமைப்பானது (நிக்காய) இரண்டு பீடங்கள் (chapter) அதாவது மல்வத்தபீடம் (Malwatta Chapter), அஸ்கிரிய பீடம் (Asgiriya Chapter) எனப் பிரிக்கப்பட்டது. இவை இரண்டும் ஆரம்பத்திலிருந்தே அமைந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். மூன்றாவது பீடமானது கல்யானி சமக்றி தர்ம மகாசங்க சபாவானது கோட்டே, களனி எனும் இரு கிளைகளாகப் பிரிக்கப்பட்டது. இதற்கு மேலாக ஊவா சியாம் நிக்காயவும் (Uva Siyam nikaya) அரன்னிக நிக்காயவும் (Arnnikaya nikaya) மல்வத்தைப் பீடத்திலிருந்து சில வருடங்களுக்கு முற்பட கிளைகளாகப் பிரிந்தன. மல்வத்தைப்பீடமும் அஸ்கிரிய பீடமும் இன்றுவரை அனுமதிப்பது அல்லது வெளியேற்றுவது தொடர்பில் அதிகூடிய அதிகாரங்களைக் கொண்ட அமைப்பாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். பிறகாலந்தோறும் பிரிந்து பெருகுவதும், ஒரு சங்கக் கட்டுப்பாடுகளுக்குப் புறம்பாகுவதும் மரபுவழி நல்ல பௌத்தர்களுக்கு துன்பம் தருகிறது.

இவர்களது சமயச் செயற்பாடுகளுக்கு அப்பால் பிரித்தானியரின் ஆட்சியிலிருந்து சுதந்திரத்தினை இலங்கை பெற்றபிற்பாடு அரசியலிலும் சமூகச் செயற்பாடுகளிலும் இவர்களது செல்வாக்கானது அதிகமாகக் காணப்பட்டது. சரணங்கார சாதிமுறைமையினை சங்கத்தினுள் அறிமுகப்படுத்தினார். சியாம் பிரிவோ அல்லது நிக்காய விவசாய இனத்தவரைவிட ஏனையவரை அமைப்பில் சேருவதனை தடைசெய்தனர். இவ்வாறு விலக்கப் பட்டவர்கள் பர்மா சென்று மீண்டு அமரபுர நிக்காயவினை நிறுவினர். மேலும் சீர்திருத்த இயக்கமாக, இராமஞ்ஞ நிக்காயவானது நிறுவப்பட்டது. முக்கியமான நிக்காயவாக சியாம் நிக்காய, அமரபுர நிக்காய, இராமன்ன நிக்காய ஆகிய மூன்று நிக்காய அமைந்தன. 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமரபுர நிக்காய, இராமாஞ்ஞ நிக்காய ஆகியன இலங்கையில் தோன்றின. புராதனமான சியாம் நிக்காயாவில் அதிகமான எண்ணிக்கையினைக் கொண்டதாக, 11474 பிக்குகள் 1973ல் இணைந்திருந்தனர். அமரபுர நிக்காயவில் 5034 பிக்குகளும் இராமாஞ்ஞ நிக்காயாவில் 3514 பிக்குகளும் விளங்கினர். செனிவிரத்னாவின் தரவின்படி 31,370 பிக்குகள் (1969 ஆனி) உள்ளதாக இலங்கைப் பதிவாளர் அலுவலகத்தில் பதிந்தவகையில் கணக்கெடுக்கப்படலாம். எனினும் இப் புள்ளிவிரமும் நிச்சயத் தன்மைக்குள்ளதோ என்பதும் ஐயத்திற்குரியதாகச் சுட்டப்பட்டுள்ளது.[27] இவர்களில் சிலர் இறந்திருக்கலாம், சிலர் தமது காவியினைக் களைந்திருக்கலாம். எனினும் இன்று இலங்கைப் பௌத்தமெனும் போது ஏழுாயிரத்திற்கு மேற்பட்ட துறவு மடாலயங்களைக் கொண்ட தாக வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சமீபகாலத்தில் இருபத்தென்பதாயிரம் சிரேஸ்ட பிக்குகள் இலங்கையில் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

---

[27] Seneviratne, H.L, The sacred and Profane in Buddhist rite, Ceylon Studies Seminar, 69/70 Series, no.7 University of Peradeniya, Kandy.

தேரவாத பௌத்தமானது அதிதீவிரமான மரபுவழி சார்ந்ததாகக் கொள்ளப்படுகிறது. தத்துவார்த்தமாக நோக்கின் இந்தியாவில் விளங்கிய ஆரம்பகால வடிவத்திலிருந்து சிறியதான மாற்றத்தினையும் அல்லது விருத்தியினைக் கொண்டதாகவே விளங்குகின்றது. இலங்கையில் குறிப்பாக இது பழமைசார்ந்த மரபுக்குரியதாகவே விளங்குகின்றது. விநய பிடகத்தில் சுட்டப்பட்டது போல சங்க மரபானது ஒரு பெண்துறவியானவர் இரண்டு தடவைகள் வலிதான பௌத்த துறவிநிலைப்படுத்தல் (உபசம்பதா-Upasampadā) வேண்டும். ஒன்று பிக்குகளினால் வலிதான பௌத்த துறவி நிலைப்படுத்தல் வேண்டும் மற்றது பெண்துறவியால் வலிதான பௌத்த துறவிநிலைப்படுத்தல் வேண்டும். ஆனால் தேரவாத பௌத்தமரபில் பௌத்த துறவிநிலைப்படுத்திய பெண் இல்லாமை யினால் பெண் துறவு வெளிப்படையாக அமைதல் சாத்தியமில்லை. சமீப காலங்களில் இலங்கையில் மஹாயான பெண்துறவி போல் இது தொடர்பில் மாற்றம் கொண்டு வரவேண்டுமென முன்மொழியப் பட்டது காணலாம். எனினும் இக் கருத்தினை வரவேற்ற போதிலும் ஆண் சங்கமானது இதனை இன்னும் ஏற்கவில்லை. சங்கத்தில் பின்பற்றும் பெண் துறவிகள் தாசசில்மாதா (*dasasīlamātā)* என அழைக்கப்படுகின்றரே ஒழிய பிக்குணிகளாக அழைக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தககது. பருமட்டாக 3000 மேற்பட்ட தாசசில் மாதாக்கள் இலங்கையில் இருப்பதாகக் காண்கின்றோம். இங்கு மக்கள் விருப்பத்திலும் பார்க்க மரபே முடிவினைத் தீர்மானிப்பதென் பது தெளிவாகும். இவ்வாறிருந்தபோதிலும் 1996ல் பத்து பெண்கள் பிக்குணிகளாக இந்தியாவில் சர்நாத் (sarnath) எனுமிடத்தில் பௌத்த துறவி நிலைப்படுத்தப்பட்டனர். பின்னர் புத்தகாயாவில் 1998ல் இலங்கைப் பிக்குணிகள் பௌத்த துறவி நிலைப்படுத்தப்பட்டனர். பின்னர் இலங் கையிலும் 2008 வரையுள்ள காலப்பகுதியில் ஏறத்தாள 500 பிக்குணி கள் பௌத்த துறவி நிலைப்பட்டதாக் குறிப்பிடப்படுகின்றது. எனினும் இது இலங்கை

அரசாங்கத்தாலோ அல்லது மகாநாயக்க தேரர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[28] சமீப காலம் வரை தாய்லாந்து, மியான்மார் ஆகியனவும் பௌத்த பழமைக்கு வலுக்கொடுப்பவர்களாகவே விளங்குகின்றனர். இலங்கையில் பிக்குணி களுக்கு நிறுவனரீதியான ஒரு கட்டமைப்பும் அமையாமைக்கு இதுவே காரணமாகும். இலங்கையில் இச் சமயத்தின் கொள்கையும் பெருமையும் மரபினைப் பேணுவதிலேயே முதன்மைக்குரியதெனக் கருதியபோதிலும் புலமைத்துவம் கொண்ட பிக்குகள் சிலர் பிக்குணிசார்ந்த நிலையை ஆதரித்தனர்.[29] இலங்கைக்குச் கலாசார முறையிலும் புவியியல் ரீதியான முறையிலும் அயல்நாடாக இந்தியா இருந்த போதிலும் இஸ்லாமிய பாதிப்பும் இதர காரணங்கள் சிலவும் அவர்களைப் பாதித்த போதிலும் பல சமய மாற்றங்களை அலட்சியப்படுத்தும் வகையில் இங்கு மரபு நிலையைப் பேணும் கொள்கை உதவிற்றெனலாம்.

### பௌத்தத்தில் புதிய சிந்தனைப்போக்கு:

மலலசேகரா, கே. என். ஜெயதிலகா, ஒல்கொட் போன்றோர் மேற் கத்தைய விஞ்ஞான வளர்ச்சி, அறிவாரய்ச்சியல் நுட்பங்களுக்கு ஏற்ப பௌத்த மெய்யியலை விளக்க முற்பட்டனர். எனினும் இலங்கையில் பௌத்தமானது அரசியல் மயப்பட்ட தன்மைக்கு உட்பட்டது. அநகாரிகதர்மபால (1864 - 1933) கருத்தியல் விளக்கங்கள் பௌத்த வாழ்வியலை புதிய பார்வைக்கு இட்டுச் சென்ற தெனலாம். துறவு வாழ்வுக்கு (விநய) வழங்கப்பட்ட விளக்கமானது வேறுபட்டு சமூக சேவை (சமாஜசேவய) க்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. சமூக சேவையானது பிக்குகளின் அரசியல் பிரவேசத்தினையும் உட்படுத்த

---

28 Bhikkhu Bodhi.Ven, The revival of Bhikkhunī ordination in the Theravāda tradition. Australia. 2008 Introduction, .p.7

29 அமரபுர நிக்காய தர்மலோக அனுநாயக தேரர், ஹிம்புறுகமுவே வைஷ்ர நாயகதேரர், வண. ஸ்ரீசுமங்கல நாயக்க தேரர் ஆகியோர் பிக்குணிகளை இணைப்பதில் ஆதரவளித்தவர்களாவர்.

வாய்ப்பளிப்பதுபோல அமைவுற்றதெனலாம். பிற்பட வல்பொலராகுல தேரர் தமது 'பிக்குகளின் பாரம்பரியம்'(பிக்சுவுகே உறுமய) எனும் நூல் பௌத்தத் துறவிகளுக்கு உலகியல் வாழ்வில் முதன்மையான இடமுள்ள தென்பதனை வலியுறுத்துவதாக அமைந்தது. இது அநகாரிக தர்மபாலாவின் சிர்திருத்தப் புத்தாக்கமென (Neo Buddhism) செனிவரத்தினா குறிப்பிடுவது பொருத்தமானதாகக் காணலாம்.[30] இதுவே பிக்குகளின் அரசியல் பிரவேசம், அரசியல் ஈடுபாடுகளுக்குப் பிற்பட பெரிதும் வழிசமைத்ததெனலாம். இது பௌத்தத்தினைச் சமய தளத்திலிருந்து பார்ப்பதற்கு அப்பால் அரசியல், பொருளாதாரம் போன்ற சமூகநிலைத் தளத்திற்கு இட்டுச் சென்றதெனலாம். இதுவே நாட்டில் பௌத்த போதனைக்கு அப்பால் உள்நாட்டுப்போர், அமைதியின்மை எனும் நிலைக்கிட்டுச் சென்றதென அறிஞர்கள் சுட்டும் தரத்திற்கு இட்டுச்சென்றது. இங்கு பௌத்த மெய்யியல் போக்கானது தீவிர மாற்றங்களை உட்படுத்தாத போதிலும் பௌத்த மெய்யியல் கட்டமைப்பினைக் காப்பதாகக் கருதப்பட்ட பிக்குகளின் அரசியல் ஈடுபாடும் தீவிரபோக்கும் தேரவாதப் பௌத்தத்தினை வேறுபட்ட ஒரு வடிவநிலைக்கு இட்டுச் சென்றதெனலாம். இவ்வாறான போக்கே ஒபயசேகரா போன்றவார் களை இலங்கைப் பௌத்தமானது வேறெரு நிலைக்குச் சென்று விட்டதெனக் கருத்துப்படக் கூறவைத்த தெனலாம்.

### பௌத்தத்தில் சடங்காசாரம்:

பாலி நூல்களின் பிரகாரம் புத்தர் எந்தவொரு சடங்காசார செயல்களையும் தெளிவாக மறுத்தமை காணலாம். அவர் வெளிப்படையாக இந்து சமூகத்தினரின் வழிபாட்டு முறைமையினை, வேத வேள்வியினை, மறுத்துரைத்தார். பௌத்தத்தின் முக்கிய அமிசங்களில் ஒன்றாக சடங்குகளில் நம்பிக்கையை துறப்பதென்பது

---

[30] சண்முகலிங்கம், பௌத்தமும் அரசியலும், 2007, கூடம் , இதழ் 6-7. ப.33.

முக்கியமானதாகும். பௌத்த மூலநூல்களின் போதனைகளுக்கு மாறாக இலங்கைப் பௌத்தமானது பௌத்தர்களின் நாளாந்த வாழ்வியலில் கிரியைகளையும் சடங்காசாரங்களையும் கைக் கொள்வது காணலாம். அன்ரனி பெனாண்டோ குறிப்பிடுவது போல மூன்று வகையான சடங்கு வடிவங்களை பௌத்தர்களின் வாழ்வில் அவதானிக்கலாம். முதலாவதாக பிக்குகள் நேரடியாக அலுவலகங் களால் அங்கீகரிக்கப்பட்ட சடங்குகள். இதில் பூஜை, பிரித் ஓதல், சமய விரிவுரைகள் (பன தேசன) எனப்படும் பிரசங்கங்கள் அடங்கும். இரண்டாவது சடங்கானது பௌத்த தத்துவத்தின் பகுதியாக அமையவில்லை. ஆனால் நடைமுறையில் உள்ளமை பிக்குகளினால் எதிர்க்கப்படவில்லை எனலாம். இது இந்து சமயத்தில் உள்ள கடவுள், பெண் கடவுளர்களை வழிபடுதலாகும். இன்றைய காலத்தில் கடவுள் நம்பிக்கையை எதிர்க்கின்ற தீவிரவாதப் போக்கு முற்றாக இலங்கையில் மறைந்துவிட்ட தெனலாம். மரபுரீதியான கடவுளரான விஷ்ணு, சிவன், முருகன், சரஸ்வதி, லஷ்மி, பிள்ளையார் போன்றவர்கள் வழிபாட்டில் முதன்மை பெறுபவர்களாக இன்றைய காலத்தில் விளங்குகின்றனர். காளி வழிபாடானது தமிழரிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்டது. சைவ அடியார்கள், அருணைகிரிநாதர் போன்றவர்கள் தமது பக்திப் பாடல்களில் சிறப்புற எடுத்தாளப்பட்ட கதிர்காமத்தில் தீ மிதித்தல், காவடி எடுத்தல் போன்றன அமிசங்கள் இன்றும் பௌத்தர்களால் மேற்கொள்ளப்படுதல் காணலாம். தென்னிந்தியாவிலிருந்து புனித திருவிழா நாட்களில் இந்து பத்தர்கள் வருகை தருவது காணக்கூடியதாகும். இன்றைய காலங்களில் அரை கோடிக்கு மேற்பட்ட பக்தர்கள் தரிசிக்க வருவதும் அதில் பெரும்பாலானவர்கள் சிங்களவர்களாக இருப்பது அவதானிக்கத்தக்கதாகும். இதுபோல பல இந்துக் கோவில்களுக்கு பௌத்தர்கள் பக்தியுடன் தரிசிப்பது சுட்டத்தக்கதாகும். முனீஸ்வரம் சிவன் கோவில், தேவிநுவர விஷ்ணு கோவில், பொன்னம்பல வாணேஸ்வர கோவில், மயூரபதிஅம்மன்

கோவில், மாணிக்கப் பிள்ளையார் கோவில் போன்றன குறிப்பிடத்தக்க சில கோவில்களாகும். இது மற்றச் சமயங்களின் அம்சங்களைத் தம்மோடு ஏற்பது சிங்கள பௌத்தர்களின் மரபுநிலைக்கு அப்பாற்பட்டதாகும். டெஸ்மன்ட் மல்லிகாராச்சி சமீபத்தில் 'வர்த்தகர்களின் கடவுளாக முருகக் கடவுள்(கதரகம தெய்யோ)'எனும் கட்டுரையில் கண்டியில் பௌத்த வர்த்தகர்களை மையப்படுத்தி செய்த ஆய்வின் பெறுபேறாக தலதா மாளிகை, விஷ்ணு, பத்தினி, முருகன், கணபதி, நாதகோவில் எனும் ஆறு கோவிலை அவதானித்து இவற்றில் அவர்கள் பெரிதும் வணங்குவது முருகன் கோவில் என்பதனையும் அடுத்தமைவது கணபதி என்பதனைத் தரவுகள் வழி எடுத்தாண்டமை பௌத்த மக்கள் இந்துக் கடவுளில் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக அமைந்தமை சுட்டுதற்குரியது.[31]

பௌத்தமும் இந்து சமயமும் இணைந்து வாழும் சூழ்நிலையானது ஒரு சமயத்தினியல்பினை மற்றச் சமயங்கள் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கு வாய்பளித்ததெனலாம். இதன் விளைவாக இரண்டிற்கு இடையிலிருந்த வேறுபாடுகள் மறைந்து பௌத்தமானது இந்து வட்டத்துள் இணைவது சாத்தியமானதாகும் என்பர். புத்தரும் சில புத்த தெய்வங்களும் இந்து வட்டங்களுள் அமைவதும் சுட்டத்தக்கதாகும். உதாரணமாக வைஷ்ணவத்தில் ஒரு சாரார் புத்தரை விஷ்ணுவின் அவதாரமாக ஏற்பதும் காணலாம். மேலதிகமாக மத்தியதர பௌத்தரிடையே சத்திய சாய்பாபா பிரபல்யமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கடந்த காலங்களில் உயர் நிலை பௌத்த அரசியல்வாதிகள் சத்திய சாயிடம் ஆசீர்வாதம் பெறும் பொருட்டு அடிக்கடி புட்டப்பத்தி சென்று வந்தமையும் சுட்டுதற்குரியதாகும். சில பௌத்த பிக்குகள் தமது

[31] டெஸ்மன்ட் மல்லிகாராச்சி (2003)"வர்த்தகர்களின் கடவுளாக முருகக் கடவுள்(கதரகம தெய்யோ)" மொழிபெயர்ப்பு, சாமிநாதன் விமல், பனுவல் கொழும்பு, இதழ் -1 ப. 24-25.

கோவில்களில் சாயி பஜனை நிகழ்த்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.[32] மூன்றாவது வழிபாட்டு வடிவம் பலி தோவில் (Bali thovil). இது அதிகார அனுமதியற்றதும் இந்த வடிவம் வெளிப்படையாக சொல்லப்பட்டதுமல்ல. இது பரந்த அளவில் நடைமுறைப்படுவதுடன் இச் சடங்குகள் கெட்ட ஆவியை சாந்தப்படுத்தி, சுகவீனங்களை மாற்றுவதற்குப் பயன்படுகின்றது. ஆட்கள் மீது பிசாசு உட்புகுதல் அல்லது ஆட்கள் மீது பிசாசு ஏறிக்கொள்வது போன்ற நம்பிக்கையைப் பௌத்தம் ஏற்றுக் கொள்கின்றதென எடுத்துக்காட்டப்படுவது காணலாம்.

இலங்கையில் பிக்குகளின் இரத்தல் பண்பானது வாழ்வியல் போக்கில் குறிப்பிட்ட வகையில் மாறிவிட்டதெனலாம். இரத்தலென்பது இன்றைய காலத்தில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தினரைத்தவிர இல்லையென்றே சொல்லவேண்டும். பௌத்த குடும்பத்தினர் உணவினை கோவில்களுக்கு அனுப்பி வைக்கின்றனர் அல்லது அழைக்கப்பட்டபோது வீடுகளுக்குச் செல்பவர்களாக இருக்கின்றனர்.

## பௌத்தத்தில் சோதிடவியல்

இந்திய கலாசாரத்தில் சோதிடமானது மரபுரீதியாக முக்கியத்துவத்திற்குரிய ஒருவகை விஞ்ஞானமெனும் அந்தஸ்தைப் பெற்றிருந்தது. சிங்களவரது கலாசாரத்தில் மரபுவழி அறிமுகமல் லாதவொன்றாகும். பொதுவில் தமிழர்களே சோதிடத்தில் பிரபல்ய மானவர்களாக விளங்கினர். சமீப காலங்களில் பௌத்த பிக்குகள், அரசியல்வாதிகள் இந்தியாவில் உள்ள சென்னை, கேரளா போன்ற இடங்களுக்குச் சென்று தமது எதிர்காலத்தை அறிவதற்கு மாத்திரமன்றி தமது நாட்டின் தலைவர்களுக்காகவும் சோதிடர் களைச் சந்தித்தமை அறிதற்குரியதாகும். எவ்வளவுதூரம் இது

[32] கொழும்பு - பௌத்தலோக மாவத்தையிலுள்ள ஒரு விகாரையில் இப் பஜன் நடைபெறுவது அவ் விகாராபதியை நேர் காண்டலின்போது பெறப்பட்டது.

அமைவுற்றதென்பதற்கு ஒரு பிரபல்யமான பிக்குவானவர் புதிய காலத்தையும் தனது இறப்பின் பின்னான தன்நிலையினையும் அறிவதோடு பழைய காலத்தையும் அறிதற்பொருட்டு காண்டம் வாசிக்க முற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**தேரவாதத்தின் புதிய தோற்றம்:**

மஹாயானத்திலும் பார்க்கத் தத்துவ அமிசங்களில் சிறு மாற்றங்களையே செய்த தேரவாதமானது பெரிதும் தளம்பாத காத்திரமானதாக விளங்கிற்று. இலங்கையில் தேரவாத பௌத்தத்தின் அரசியல் செல்வாக்கானது பௌத்த மெய்யியலின் அடிப்படையில் நோக்கப்படாது சங்கத்தினடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டியதாகும். புதிய உலகத்தின் எதிர்பார்ப்பிற்கமைய தேரவாதத்தினை உயர்த்துவதற்குப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. இலங்கையரசானது சமீபத்தில் புத்த சாசன அமைச்சினை உருவாக்கியமையும் இக்கருத்தினை அமுலக்கவே என எடுத்தாளப் படடது. பௌத்தக் கல்வியை நவீன சிந்தனையுடன் அபிவிருத்தி செய்வதற்கும் சமய தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை யெடுக்கப்பட்டது. சுதந்திரம் அடைந்த பிற்பாடு பௌத்த குருமாருக்காக அநுராதபுரத்திலும் ஹோமகமவிலும் இரண்டு பல்கலைக்கழகமும் அறுநூறு பிரிவினாக்களும் பௌத் கல்வியை அபிவிருத்தி செய்ய முற்பட்டன. வித்தியலங்கார, வித்தி யோதய பல்கலைக்கழகங்களின் உருவாக்கங்களும் குறிப்பாக பௌத்த, பாலி மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களித்தன. இவை கொழும்புக்கு அருகிலுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டன. இவை பிக்குகள் சூழல்தன்மைக்கு ஏற்ப தம்மைத் தகவமைத்துக் கொள்ள வாய்ப்பளித்த தெனலாம்.

1950ல் தேரவாத சமயத்தவர்கள் இலங்கையில் உலக பௌத்த மகாநாடொன்றை ஒழுங்குபடுத்தினர். உலக பௌத்த அமைப்பினை ஏற்படுத்தி ஜப்பான் உலகெங்கனுமுள்ள வேறுபட்ட

பௌத்த மரபுக்களை ஒன்று சேர்க்க முயற்சித்தனர். ஆனால் மரபுவழியான தத்துவத்தின் புனிதத்தைப் பேணுகின்ற தேரவாத மானது இம் முயற்சிக்குப் பெரிதும் ஒத்துழைக்காததுடன் தேரவாத நாடுகளில் ஆறு உலக பௌத்த மகாநாடுகளை நடாத்தியுள்ளது. மேலும் தேரவாத பௌத்தத்தின் தலைமையகமாக இலங்கை, ரங்கூன், பாங்கொக் ஆகிய நாடுகள் அமைந்து கொண்டன எனலாம். பொதுவில் பௌத்தத்தின் வளர்ச்சியானது ஆசிய பௌத்த நாடுகளுக்கிடையில் நிலவும் அரசியல் வேறுபாடுகளானது பாதிப்பதாக அமைந்தன. கல்விப்புலமை சார்ந்த வகையில் ஆரம்ப காலத்தில் மலலசேகரா, கே.என். ஜெயத்திலகா, ஞானசீலதேரர், இராகுல தேரர், கொடகமவிஜித தேரர் ஆகியார் குறிப்பிடத்தக்க வகையில் பௌத்த வளர்ச்சிக்கு பங்களித்த வர்களாகச் சுட்டத்தக்கவர்களாவர். எனினும் பௌத்த மெய்யியலின் பிற்பட்ட காலப்போக்கினை விமர்சன ரீதியில் ஆராய முற்பட்டவர்களாக கணநாத் ஒபயசேகர[33], எஸ்.ஜே.தம்பையா[34], ஏச்.எல்.செனிவிரத்தின[35] ஆகிய மூவரும் குறிப்பிடத்தக்கவர்களாவர் என ஜயதேவ உயன்கொட சுட்டுவது காணலாம்.[36] இவர்கள் மூவரும் மானிடவியலாளாவர். ஒபயசேகரா, றிச்சாட் கோம்பிறிஜுடன் இணைந்து எழுதிய நூலில் சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் பௌத்தம் தேரவாத பௌத்தமல்ல என தனது ‘நிலைமாற்றம் பெற்ற பௌத்தம்’ எனும் நூலில் எடுத்தாளுகிறார்.[37] இங்கு

---

[33]See, Gananath Obeyesekere & Richard Gombrich,1988. - Buddhism Transformed, Religious change in Sri Lanka. University of Princeton

[34]See, Stanley Jeyarajah Tam piah 's Publication - ' Buddhism Betrayed? Religion, Politics and Violence in Sri Lanka'

[35] See, Senevaratne,H.L, (1999) publication -'The work of king: The Buddhism in Sri Lanka'

[36] ஜயதேவ உயன்கொட,2007, இலங்கையின் சமூக அரசியல் மாற்றங்களும் பௌத்த மதமும், கூடம்,இதழ் 6-7, ப.23.

[37] Gananath Obeyesekere & Richard Gombrich,1988. Buddhism Transformed, Religious change in Sri Lanka. University of Princeton

கணநாத் ஒபயசேகரா எடுத்தாள்வது பௌத்தத்தில் நிலைமாறுகின்ற வழிபாட்டுக்குரிய தெய்வ நிலைகளும் தேரவாதம் காணாத சடங்காசாரங்களுமே எனலாம். மேலும் ஒபயசேகராவின் 'புரட்டஸ்தாந்திய பௌத்தம்' எனும் சர்ச்சைக்குரிய கருத்தியலும் பௌத்த கருத்தியல் மாற்றம் பற்றிய புதிய சிந்தனைக்குக் களமமைத்ததெனலாம்.

மேலும் பௌத்தத்தைப் பொறுத்தவரையில் சமய வாழ்வியலுள் தம்மை அர்ப்பணித்தவர்கள் பலர் கல்வியியலில் மதிக்கத்தக்க உயர்நிலையை அடைந்தவர்களாக இருந்ததுடன் கருத்தியல் வளர்ச்சிக்கு வழிசமைத்தவர்களாக விளங்கினர். இந்நிலைமை கிறிஸ்தவ சமய வாழ்வியலுக்குள் இருந்த பாதிரிமார்கள் பலரும் கல்வியியல் நிலையில் சிறப்புப் பெற்று சேவையாற்றியவர்களாக விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை இலங்கையில் இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் சமயவாழ்வியலுடன் இணைந்த வகையில் வாழ்ந்த கல்விமான்கள் அருகிய நிலையிலேயே இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கைலாசநாதக் குருக்கள், குமாரசாமிக் குருக்கள், லக்ஷ்மண ஐயர் போன்ற ஒரு சிலரே இவ்வகையில் எடுத்துக்காட்டத்தக்கவர்களாவர்.

பல்வேறுபட்ட நிறுவனங்கள் பௌத்தத்தினை நிலைநாட்டும் அல்லது அபிவிருத்தி செய்யும் வகையில் பல்வேறுபட்ட இடங்களில் புத்தசிலைகளை நிறுவுவது நடைபெறுவது காணலாம். ஆனால் இவை சமய ஆளுமையினை அபிவிருத்தி செய்வதாகவோ இளைஞர்களிடத்து சமய விழிப்புணர்வை ஏற்படுத்தவல்ல தெனக் கூற முடியாததாகும். சமகாலத்தில் நாட்டுக்குத் தேவையானது இன்றைய பிரச்சினைகளுக்கு அறிவுபூர்வமாக பௌத்த ஞானத்தின் வழி தத்துவத்தினைக் கருத்தியல் ரீதியில் புரிந்துணர்ந்து செயல்படுவதே பொருத்தமானதாகும். இதர அபிவிருத்தியானது வெறும் சடரீதியான அபிவிருத்தியாகவே அமைவதாகும்.

## உசாத்துணை:


| | |
|---|---|
| ஜயதேவ உயன்கொட, | இலங்கையின் சமூக அரசியல் மாற்றங்களும் பௌத்த மதமும், கூடம், இதழ் 6-7. 2007 |
| டெஸ்மன்ட் மல்லிகாராச்சி | "வர்த்தகர்களின் கடவுளாக முருகக் கடவுள் (கதரகம தெய்யோ)" (மொழி பெயர்ப்பு) சாமிநாதன் விமல், பனுவல் கொழும்பு, இதழ்-1 2003 |
| சண்முகலிங்கம், | பௌத்தமும் அரசியலும், கூடம் , இதழ் 6-7. 2007 |
| பத்மநாதன். பேராசிரியர்.சி, | இலங்கையில் இந்து சமயம் குமரன் புத்தக இல்லம்,2005 |
| உமாபதிசிவாசாரியார், | சிவப்பிரகாசம் |
| ஞானகுமாரன்,நா | பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் சமய தத்துவ நோக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளிவிழா கருத் தரங்குக் கட்டுரைகள், யாழ்ப்பாணம். 1995. |

ஞானகுமாரன்.நா., பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள், அருளம்பல சுவாமிகள் சபை, வியாபாரி மூலை, பருத்தித் துறை. 1994

ஞானகுமாரன், பேராசிரியர்.நா, வேதாந்த மெய்யியல், சேமமடு, கொழும்பு.2012

கைலாசபதி,க. தமிழரிடையே மொழி பண்பாடு பற்றிய உணர்வு. கூடம், காலாண்டு இதழ்15, 2010

தத்துவலிங்க தேவர், தத்துவநிஜானுபோகசாரம், ஆண்டு, பதிப்பு ஆகியன சுட்டப்படவில்லை,

தத்துவப் பிரகாசர் தத்துவப்பிரகாசம், கணபதிப்பிள்ளை (பதிப்பு) நந்தன வருடம்,.

வடிவேல், திருக்கோணாமலை மாவட்டத் திரு ப்பதிகங்கள், இந்துசமயத் திணைக் களம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு, 1982

கந்தையா, மு சைவசித்தாந்த நோக்கில் கைலாச பதி ஸ்மிருதி, யாழ்ப்பாணப் பல்க லைக்கழகம், 1998.

| | |
|---|---|
| கணநாத் ஒபயசேகரா, றிச்சாட்கொம்பிறிஜ், | புரொட்டெஸ்பௌத்தம், (தொகுப்பு) தா. சனாதனன், இலங்கைச் சமூகத் தையும் பண்பாட்டையும் வாசித்தல்: தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகள், சமூகப் பண்பாட்டு உயர் கற்கைக் கான கொழும்பு நிறுவனம், இரண் டாம் தொகுதி. (103-156) 2005 |
| குணராசா.க. | யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி, யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி அறக்கட்டளை, கொழும்பு. 2006 |
| குலரத்தினம்,க.சி. | இந்துபோட் இராசரத்தினம், சைவ வித்தியாவிருத்திச் சங்கம், யாழ்ப் பாணம், 2010 |
| கைலாசபதி.சு | மௌன தவமுனிவர் கைலாசபதி வாழ்வும் சிந்தனையும். பாரதி பதிப்பகம்.யாழ்ப்பாணம் 2012 |
| முருகேசன்,சி.எஸ் | புதுச்சேரி சித்தர்கள், சங்கர் பதிப் பகம், சென்னை, 2003 |
| முருகேசன்,சி.எஸ் | பாரதி கண்ட சித்தர்கள், குறிஞ்சி, சென்னை, 2002 |

லலிதாமினி முருகேசு — பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் பகுப்பாய்வும் நுண்ணாய்வும் பொ கைலாசபதி நூற்றாண்டு நினைவுக்குழு யாழ்ப்பாணம் 2003

திருமூலர் — திருமந்திரம்,

திருஞானசம்பந்தர் — 2ம், 3ம் திருமுறை பதிகங்கள்

Bhikkhu Bodhi. Ven, — The revival of Bhikkhunī ordination in the Theravāda tradition. Australia. 2008

Gananath Obeyesekare — Religious symbolism and Political changes in Ceylon, Modern Ceylon Studies, A Journal of the Social Science, University of Ceylon, Vol 1, 1970

Glasenapp,H.Von, — Vedanta and Buddhism, The wheel publication, Kandy,1960.

Gnanakumaran,N — The Development of Vedanta and Buddhism in Sri Lanka during the last fifty years, Padmam, Bavani pathippakam, Jaffna. 2004

______________ The Concept of Advaita in Saiva Siddhanta, Prof.A.Thurairajah Commemoration Lecture, Uddupiddy American Mission College Jaffna. 1997.

Heinrich Dumoulin Buddhism in the modern world, Collier Macmillan Publishers, London. 1976.

Jeyatileke,K.N. The message of the Buddha, George Allen & Unwin ltd. London.1975

______________ Buddhist attitude to other religions, World of Religion, International Buddhist magazine, Sri Lanka, Vol.8. no.1, 1992/3

Kalupahana, D.J. A History of Buddhist Philosophy, Motilal Banarsidass Publisher,s New Delhi. 1994.

Malalasekara,G.P. The Buddha and his teachings, The Lanka Bauddha Mandalaya Ceylon. 1957.

Margaret Stulty, Hinduism, The Aguraian press, London. 1985

Richard Gombrich & Gananath Obyesekare Buddhism Transformed, Religious change in Sri Lanka. University Gananath Obeyesekere of Princeton .New Jersey. 1988

Richard Gombrich Theravada Buddhism-A Social History from ancient Benares to Modern Colombo, Routledge & Kegan Paul.ltd. London. 1988.

Saram,P.A. Buddhism and Society in Modern Sri Lanka, International Social Science Journal - Social Dimensions of Religion, Unesco, Vol. xxix,1977

Seneviratne, H.L, The sacred and Profane in Buddhist rite, Ceylon Studies Seminar, 69/70 Series, no.7 University of Peradeniya, Kandy.

| | |
|---|---|
| Senevaratne,H.L, | 'The work of king: The Buddhism in Sri Lanka' University of Chicogo, London,1999 |
| Vythilingam,M | Ramanathan of Ceylon The Life of Sir Ponnambalam Ramanathan, 1977 |
| Urmila Phadnis | Religion and Politics in Sri Lanka, Manohar Book Service, New Del 1976. |

A.B



பேராசிரியர் நா. ஞானகுமாரன்
மெய்யியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் கலாநிதி நாகநாதன் ஞானகுமாரன் கடந்த முப்பத்தாறு வருடங்களாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மெய்யியல் துறையில் கடமையாற்றி வருபவர். இவர் இரு வருடங்கள் நுண்கலைத்துறைத் தலைவராகவும் மூன்று வருடங்களுக்கு மேலாக மெய்யியல் துறைத் தலைவராகவும் இரு வருடங்கள் சட்டத் துறைத் தலைவராகவும் கடமையாற்றியதுடன் கலைப்பீடாதிபதியாவும் (2009 -2011) பணியாற்றியவர்.

இவர் பாரதி போற்றிய அருளம்பலசுவாமிகள் (1992), நயம்தரும் சைவசித்தாந்தம் (1994), சைவசித்தாந்தத் தெளிவு (1994), சைவசமயப் பிரிவுகள் பற்றிய ஓராய்வு (1995), சைவசித்தாந்தத்தில் அத்வைத எண்ணக்கருத்து (1997), மெய்யியல் (2003), அருளாளர்களின் சமய அனுபவம் (2004), சைவசித்தாந்தத் தெளிவு (திருத்திய பதிப்பு 2012), மாயை பற்றிய கருத்தும் வேதாந்தக் காட்சியும் (2012), மெய்யியல் (திருத்திய பதிப்பு 2012), வேதாந்த மெய்யியல் (2012) முதலிய நூல்களின் ஆசிரியராவார்.

மெய்யியல், சைவசித்தாந்தம், வேதாந்தம் ஆகிய துறைகளில் ஆழமான ஈடுபாடும் ஆராய்ச்சிக் கண்ணோட்டமும் மிக்கவர். சுவீடன் ஒப்சலா பல்கலைக்கழகம் (1993-94), அரிசோனா அமெரிக்க பல்கலைக்கழகம் (2007-08), இலண்டன் பல்கலைக்கழகம் (2008-09) ஆகியவற்றில் வருகைப் பேராசிரியராகவும் ஆராய்ச்சியாளராகவும் பணிபுரிந்தவர். இந்தியாவில், அமெரிக்காவில் உள்ள பல பல்கலைக்கழகங்களில் நடைபெற்ற ஆய்வரங்குகளில் பங்கு பற்றி ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தவர். இவரது சைவசித்தாந்தத் தெளிவின் முதல் பதிப்பானது இலங்கைச் சாகித்திய பரிசினையும் வடமாகாண சாகித்தியப் பரிசினையும் பெற்றது (1995). இவரது மற்றொரு நூலான வேதாந்த மெய்யியலானது கடந்த வருட இலங்கைச் சாகித்தியப் பரிசினைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும் (2012).